# பாதுகாவலன்

PATHUKAVALAN


தொடர் நிலை.

| | | |
|---|---|---|
| 15. | நாரந்தனை | 171 |
| 16. | புதுக்குடியிருப்பு | 165 |
| 17. | சுன்னாகம் | 153 |
| 18. | இரணைதீவு | 152 |
| 19. | உரும்பிராய் | 150 |
| 20. | யாழ். யுவானியார் | 135 |
| 21. | பண்டத்தரிப்பு | 132 |
| 22. | மண்டைதீவு | 131 |
| 23. | நீர்கொழும்பு | 126 |
| 24. | நெடுந்தீவு | 121 |
| 25. | செக்கட்டித்தெரு | 120 |
| 26. | மயிலிட்டி | 119 |
| 27. | முல்லைத்தீவு | 115 |
| 28. | விடத்தல்தீவு | 115 |
| 29. | பண்டிவிரிச்சான் | 110 |


மலர்: 116 இதழ் : 21   15-6-1990   ( ஜுன் 15 — ஜுன் 22 )   இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு   விலை ரூபா 2/=


### மாதம் இருமுறை வார இறுதிநாட்களில் ஆறுமாதங்கள் கற்கைநெறி

## புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியால்

# தமிழ் பொதுநிலையினருக்கு இறையியல்

"யாழ். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி, இறைவன் நம் மக்களுக்குக் கொடுத்த விசேட ஆசீர்வாதம்" எனக் கூறிய யாழ். ஆயர், தாம் பல எதிர்ப்புக்கள் மத்தியிலும் இக்குருமடத்தை ஆரம் பித்தபடியால் பொதுநிலையினருக்கு இறையியல் கல்வி கற்பிக்க பல விரிவுரையாளர்களைக் கைவசம் வைத்திருப்பதாக சென்ற சனிக் கிழமை (ஜுன். 9) யாழ் மறைவட்ட பொதுநிலையினர் கழக மண்ட பத்தில் குறிப்பிட்டார்.

யாழ் மறைக்கல்வி நடு நிலையத்தில் பொது நிலை யினர் கழகத்தினர், பொது நிலையினருக்கான இறையியல் கற்கை நெறியை ஆரம்பித் தனர்.

மாதம் இருமுறை, சனி ஞாயிறு தினங்களில் ஆறு மாதங்களுக்குத் தொடரவுள்ள கற்கை நெறி சென்ற சனிக் கிழமை யாழ். ஆயர் பேரருள் திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் ஆரம் பித்து வைக்கப்பட்டது.

கற்கை நெறிக்குப் பொறுப் பாகவுள்ள புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி அதிபர் அருள்திரு. எஸ். ஜே. இம்மானு வேல் அடிகளார் "இக்கற்கை நெறியை ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக்கையானது பொது நிலையினரிடமிருந்தே வந்தது" என்றார்.

பொதுநிலையினர் கழகத் துக்குப் பொறுப்பாயுள்ள யாழ் மறைவட்ட முதல்வர் வந்தனைக்குரிய மைக்கல்சாமி அ. ம. தி. அவர்கள் "இக் கோரிக்கை இரண்டு ஆண்டு களுக்கு முன்பே முன்வைக்கப் பட்டது" என்று தம் உரையில் குறிப்பிட்டார்.

யாழ். ஆயர் தமது உரையில் "பல எதிர்ப்புக்களின் மத்தியில் யாழ்ப்பாணத்தில் பெரிய குருமடத்தை நாங்கள் ஆரம்பித்தோம். ஆனால் இறைவன் நம்மை ஆசீர்வதித் துள்ளார். இக்குருமடத்தின் பயனாகவே இப்போது பொது நிலையினருக்கு இறையியல் கற்பிக்கத் தேவையான பல குருக்களை நாங்கள் கைவசம் வைத்திருக்கிறோம்" என்றார்.

## கத். அரும்பொருட் காட்சிச்சாலை

**யூக்கன், மே 15**

வியட்நாமிலுள்ள ஹோசி மின் நகரில் ஓர் கத்தோலிக்க அரும்பொருட் காட்சிச்சாலை அமைக்கப்படவிருக்கிறது. வியட்நாமிய திருச்சபையின் வரலாற்றை சேகரித்து வைப் பதும், திருச்சபை பற்றிய ஆய் வுகளைச் செய்வதும், மக்கள் மத்தியில் இறைபக்தியையும், நாட்டுப்பற்றையும் வளர்ப் பதுமே இதன் நோக்கங்களா கும்.

இக்காட்சிசாலை 1863 — ல் அமைக்கப்பட்டு 1975 வரை ஓர் குருமடமாக இருந்த ஓர் கட்டிடத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது. இது 80 வயதான பேராயர் பின்னினால் செப். 1ஆம் திகதி திறந்துவைக்கப் படும்.

## அருட்திரு. அமலோற்பவதாஸ் காலமானார்

மைசூர் அஞ்சலி ஆச்சிரம நிறுவுனரும் அதிபருமாகிய அருள்திரு. அமலோற்பவதாஸ் சென்ற 25 ஆம் திகதி மோட் டார் விபத்தில் சிக்கி அகால மரணமானார்.

கருதினால் D. S. லூர்து சாமியின் சகோதரனான அருள் தந்தை அவர்கள் சிறந்த கல்வி மானும் ஆசியாவின் பிரபல இறையியலாளரும், பெங் களூரிலுள்ள இந்திய தேசிய விவிலிய வழிபாட்டு மறைக் கல்வி நிலைய நிறுவுனரும், நீண்ட கால அதிபருமாவார். இவரே மைசூர் பல்கலைக் கழ கத்தில் கிறிஸ்தவ துறை கல்வி நெறியை ஆரம்பித்து அதன் தலைவராகப் பணியாற்றி வந் தார். இவரது இறப்பு தமிழ் திருச்சபைக்கும், இந்தியத்திருச் சபைக்கும் பேரிழப்பாகும்.

## திருமண ஆயத்தம் அவசியம்

யூக்கன் மே 14

"திருமணம் பற்றிய திருச் சட்டங்களை நீங்கள் படித் திருக்கலாம், ஆனால் குடும்ப வாழ்வுக்கு அன்புதான் சட்டம்"

பாகிஸ்தானிலுள்ள கன்ன வால் என்னுமிடத்தில் குடும்ப வாழ்வுபற்றிய ஓர் கருத்தரங் குக்காக ஒன்றுகூடியிருந்த மறையாசிரியர்களுக்கும், அவர் களது மனைவியருக்கும் ஆயர் யூசுப் இவ்வாறு கூறினார்.

கராச்சி **மறைக்கல்**வி நிலை யத்தின் இயக்குநரான பிதா அஞ்ஜோ சுவாறஸ் திருமணத் துக்கு ஆயத்தம் அவசிய மென்றும், எமது கலாசாரத் தில் காதல் திருமணங்களை விட பெரியோரால் நிச்சயிக் கப்பட்ட திருமணங்களே நிலைத்து நிற்கின்றன என்றும் குறிப்பிட்டார்.

## அரசு மன்னிப்புக் கேட்கவேண்டும்

தென்கொரியாவில் 1980—ம் ஆண்டு மே18ஆம் திகதி நடந்த ஜனநாயக ஆதரவாளர்கள் மீதான தாக்குதல்கள் இந் நாட்டு வரலாற்றில் வேதனை தரும் காயங்களில் ஒன்று.


(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)


## மடுத்திருவிழா -- 02-07-1990

மடுப்பதித் திருவிழா வழமைப்பிரகாரம் வருகின்ற மாதம் 2ஆம்திகதி கொண்டாடப்பட உள்ளது இவ்விழாவிற்கான நவ நாட்கள் இம்மாதம் 23ஆம் திகதி ஆரம்பமாகும். இம்முறை நாடு முழுவதிலும் இருந்து பெரும் திரளான பக்தர்கள் இவ் விழாவில் கலந்துகொள்வார்கள் என நம்பப்படுகிறது. யாத் திரிகரின் நலன் கருதி போக்குவரத்து வசதிகளும், ஏனைய அத்தியாவசிய தேவைகளும் ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட் டுள்ளன. திருநாள் திருப்பலியை கொழும்பு அதிமேற்றி ராணியார் பேரருட்திரு. நிக்கொலஸ் மாக்கஸ் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில், மன்னார் ஆயர் பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களும் பல குருக் களும் சேர்ந்து ஒப்புக்கொடுப்பார்கள்.

மடுப்பரிபாலகர்.

## இரத்ததானத்தில் கல்லூரி முதலிடம்

**யூக்கன், மே 16**

கல்கத்தாவிலுள்ள புனித சவேரியார் கல்லூரி இரத்த தானம் அளிப்பதில் முதலி டத்தை ஏழாம் முறையாகப் பெற்றுள்ளது. இக்கல்லூரி ஆண்டில் நான்கு முறை இரத்ததான முகாம்களை நடத்தி வருகின்றது. அத்துடன் அவசரவேளைகளில் மாணவர் உடனடியாகவும் இரத்ததானம் அளிக்கின்றனர்.

## ஆயர் பேரவைக்கான தயாரிப்பு

வெரித்தாஸ், ஜுன் 10

வத்திக்கானில் நடைபெற விருக்கும் ஆயர் பேரவைக் கான தயாரிப்பாகத் திருத் தந்தை 2-ம் அருள் சின்னப்பர் ஒரு ஆலோசனைக் கூட்டத்தை ஏற்பாடு செய்தார். இக்கூட் டத்தில் வத்திக்கான் அரசு செயலகரான கருதினால்


(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)


## அமைதிக்கான சர்வமத வழிபாடு

வெரித்தாஸ் ஜுன்10.

இத்தாலியில் பாரி நகரில் வருகின்ற செப்டம்பர் 25—28 வரை அமைதிக்கான அகில உலகப் பிராத்தனைக் கூட்டம் நடைபெறும். இக்கூட்டத்தில் 50 நாடுகளிலிருந்தும் கிறீஸ்தவ பிரிவுகளைச் சேர்ந்த பிரதி நிதிகளும் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது

### கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

# எம்கருத்து

## ஜூன் மாதம்

இது இயேசுவின் திரு இருதயத்தின் மாதம். வருகிற வெள்ளிக்கிழமை இயேசுவின் திரு இருதயத்தின் விழா. திரு இருதயப் பக்தி, பரப்பப்பட காரணமாக இருந்தவர் புனித மார்கரித் மரியம்மாள்.

இவர் பிரான்ஸ் நாட்டில் 1647 ஜூலை 22 இல் பிறந்து 1671 இல் துறவற வாக்குத்தத்தத்தை மேற்கொண்டு 43 ஆவது வயதில் 1690 இல் இறைபதம் அடைந்தார். 1864 இல் திருத்தந்தை 9 ஆம் பத்தினாதரால் ஆசாரத்துக்குரியவர் என அறிக்கையிடப்பட்டு, 1920 இல் திருத்தந்தை 15 ஆம் ஆசீர்வாதப்பரால் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்ட புனித மார்கரித் மரியம்மாள் 1675 இல் இயேசுவின் திருவுடல் திரு இரத்தத்தின் விழாவைத் தொடர்ந்து வந்த நாட்களில் ஆண்டவரின் பல திருக்காட்சிகளைக் காணும் பாக்கியத்தைப் பெற்றாள்.

இயேசுவின் திரு இருதயத்தை மையப்பொருளாகக் கொண்டதாகவே இக்காட்சிகள் அமைந்தன.

புனித மார்கரித் மரியம்மாளுக்கு கொடுக்கப்பட்ட பல்வேறு காட்சிகள் மூலம் பல வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டன. இயேசுவின் அன்புக்குப் பிரதி அன்பு காட்டவேண்டும் என்றும், அந்தப் பிரதி அன்பானது செயலில் வெளிக்காட்டப்படவேண்டும் என்றும், இயேசுவின் திரு இருதயப் பக்தியின் மூலம் இயேசுவின் அன்பை நினைவு கூர்ந்து, அவரது பாடுகளுக்குக் காரணமான எமது பாவங்களுக்குப் பரிகாரம் தேடி பிரதி அன்பு காட்ட முடியும் என்றும் அக்காட்சிகள் வேண்டுகோள்களை விடுத்தன.

நடைமுறையில் இவற்றைக் கடைப்பிடிக்க பல்வேறு வழிமுறைகள் புனிதை மூலம் தெரிவிக்கப்பட்டன.

அடிக்கடி நற்கருணை உட்கொள்வது முதலாவதாகும். ''முடிந்த மட்டும், நற்கருணையில் நீ என்னைப் பெற்றுக்கொள்வாயாக'' என புனித மார்கரித் மரியம்மாளைக் கேட்டுக் கொண்டே இறைவன் நற்கருணையைத் தாம் ஏற்படுத்தியது மக்கள் மேல் தாம் கொண்ட அன்பின் அதி உயர்ந்த வெளிப்பாடு என்றார். ''என் உடல் மெய்யான உணவு இதை உண்பவன் வாழ்வான்'' (அரு. 6: 54 – 58) என இயேசு நற்கருணையைப் பெறுவதன் பலனை விளக்குகிறார். புனித மார்கரித் மரியம்மாளுடைய மடத்தில் ஞாயிறு, வியாழன் ஆகிய இரு தினங்கள் மட்டும் நற்கருணை வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து ஒன்பது முதல் வெள்ளிக்கிழமைகளில் திருப்பலியில் பங்குபற்றி நற்கருணையைத் தகுதியுள்ள முறையில் பெற்றுக்கொள்பவர்களுக்கு நல்மரணம் கிடைக்கும் என்ற உறுதிமொழியும் புனித மார்கரித் மரியம்மாள் மூலம் தெரிவிக்கப்பட்டது.

கிறிஸ்துவின் திரு உடல் திரு இரத்தத்தின் விழாவைத் தொடர்ந்து வரும் வெள்ளிக்கிழமை இயேசுவின் திரு இருதயத்தின் விழாவுக்கென ஒதுக்கப்பட வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

திருத்தந்தை 12 ஆம் பத்திநாதர் 1956 இல் வெளியிட்ட சுற்றுமடலில் இயேசுவின் திரு இருதயமானது உயிரைத்தரும் நீரைச்சுரக்கும் ஊற்று என்றார். அன்பின் பிறப்பிடமாக அவர் இயேசுவின் இதயத்தை விளக்கினார்.

கொழும்பு பேராயர் தமது குருக்களுக்கு விடுத்துள்ள அறிவுரையில் திரு இருதயப் பக்தியை கத்தோலிக்கர் மத்தியில் கட்டி எழுப்பும்படி கேட்டுள்ளார்கள்.

உலகியல் போக்கு வளர்ந்து வரும் காலத்தில் இறை உணர்வை மக்களுக்கு ஊட்டி வளர்க்க, புனிதர்கள் மூலம் இறைவன் பயன்படுத்திய கருவிகளை நாமும் உபயோகிப்போம்.

# தேனருவி

### திருஉடல் திரு இரத்தப் பெருவிழா (17-06-90)

## பொருளையல்ல ஆளை அன்பு செய்

சவுதி அரேபியாவில் கடந்த நான்கு ஆண்டுகளாகத் தொழில் புரிந்தார் ஒரு தந்தை. தன் மனைவி, பிள்ளைகள் மேல்வைத்த உண்மையான அன்பினால் உந்தப்பட்டு, தனிமை, கடின உழைப்பு, வெய்யில், குளிர் போன்ற இடர்பாடுகளையெல்லாம் ஒரு பொருட்டாகக் கருதவில்லை. தன் தியாகத்தின் விலையை அவர் மட்டும் உணர்ந்தவராகத் தன் மனைவி, பிள்ளைகள் தமக்கு அன்புடனும், கரிசனை, நன்றியுடனும் கடிதம் வரைய வேண்டும், சிக்கனமும், முன்னேற்றமும் கொண்டு வாழ வேண்டும் என்றும் எதிர்பார்த்தார். ஆனால் அவருக்குக் கிடைக்கும் ஒவ்வொரு கடிதமும், பணத்தையும், சவுதி சாமான்களையும், ஆடம்பரப் பொருட்களையும் விண்ணப்பித்த வண்ணமே சுமந்துசென்றன. குடும்பத்தவரின் எதிர்பார்ப்பிற்கு இன்னும் பத்து வருடங்கள் தாய் நாடு திரும்பாமல் உழைத்தாலும் நிறைவு செய்யலாமா என்பது அவரது தற்போதைய சந்தேகம்.

மனிதர்களிலும் பார்க்க, பொருட்களை அதிகமாக அன்பு செய்வதால் உள்ளங்களில் வெறுமையையும், உறவுகளில் தனிமையையும், சமுதாயத்தில் ஏமாற்றத்தையும் காண்கிறோம்.

நீண்ட நாற்பது ஆண்டுகளாகப் பாலைவனத்தின் வரட்சியின் கொடுமையில் இருந்தும், கொடியநச்சுப்பிராணிகளின் தீண்டுதலில் இருந்தும், கண்மணி போலப் பாதுகாத்தும், மக்கள் பாதுகாத்த ஆண்டவனை இனம் கண்டு கொள்ள மறுத்தனரே. அப்பத்தைப் பார்த்த கண்கள், வழங்கும் அன்புக் கரங்களைக் காண மறுத்துவிட்டன. கொரிந்து வாழ் மக்களும், ஒன்றாகக் கூடி, ஒரே அப்பத்தின் விருந்தில் கலந்து கொண்டவர்கள் தம்மிடையே பிரிவினைகளையும், வேற்றுமைகளையும் வளர்த்துக்கொண்டே இருந்தனர். இவர்களைச் சாடும் புனித சின்னப்பர் அப்பத்தை வெறும் பசி போக்கும் உணவாகவல்ல; ஒன்றிப்பிற்கு வழிவகுக்கும் அருங்குறியாகக் காணச் சொல்கிறார்.

வழிபாட்டில் பாடகர் குழாம், வாத்தியகாரர்கள், வாசகர்குழு, சோடினைக்காரர், பீடப்பணியாளர், இவர்கள் அனைவரும் ஒரு அப்பத்தை உண்ணும் அன்புச் சீடராக வல்லவா வாழவேண்டியவர்கள். இவர்களில் சிலர் வாடிக்கைக்காரரும், வேஷக்காரருமாய் மாறிவிடுகின்றனர். குடும்பத்தகராறுகளை கோவிலில் மேடையேற்றுகிறார்களே. அப்பங்களை வயிறார உண்ட யூதர்கூட்டம் மீண்டும் இயேசுவைத் தேடியது. ஆனால் இயேசுவின் வார்த்தையையும், அதனோடு இணைந்த சவால்களையும் ஏற்க மறுத்தது.

நற்கருணை ஆராதனை, பவனி விழா என்று பக்தி முத்திப் பரவசமாகும் பக்தர்கள், நற்கருணைநாதர் தரும் சவால்களை ஏற்க மறுக்கின்றனர். பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கோவில் மாறி கோவிலுக்கும், பதி மாறி பதிகளுக்கும் செல்வோர், கொடுக்கின்ற ஆண்டவரின் தியாகத்தைக் காணவும், அதைக் கடைப்பிடிக்கவும் மறுக்கின்றனர்.

ஆண்டவரின் அன்பையும், அருளையும் அனுபவிக்கும் சிகரமாக விளங்கும் நற்கருணையிலும் பார்க்க, குழந்தை இயேசு, அந்தோனியார், வேளாங்கண்ணி மாதா போன்ற பக்தி முயற்சிகளும், நவநாட்களும் முக்கியம் எனக் கருதும் பக்தர்களின் வேண்டுதல் ஆண்டவனுக்கோ, அன்றேல் அப்புனிதருக்கோ ஏற்குமா? வழிபாடுகள் சுயநல கும்பல்களைப் பெருக்கலாமா?

கொடுக்கக் கொடுக்க, கொடுப்பவரைக் காணாது, அவரை அன்பு செய்ய விரும்பாது, கொடுக்கப்படும் பொருளையே முழித்துப்பார்த்து அபகரிக்கும் சுயநலக் கும்பலாக நாம் இருந்தால்; நற்கருணைப் பந்தியானது மேலும் மேலும் ஏமாற்றத்தையும், விரக்தியையும், வெறுமையையுமே பிரதிபலிக்கும். நற்கருணை ஒரு உறவுப்பரிமாற்றம். உறவுக்கு இருவர் தேவை. கொடுப்பதும் பெறுவதும் அன்பின் முழுமை. அதனால் பெறுவது மட்டுமல்ல; கொடுக்கவும் வேண்டும். அன்பையும், மன்னிப்பையும், அருளையும் பெறுவது மட்டுமல்ல, கொடுக்கவும் தெரிய வேண்டும். பெற்றுக்கொள்ளும் போது பொருளையல்ல; தரும் கரத்தையும்; தருவோரின் உள்ளத்தையும்கூட உற்றுப் பார்க்க வேண்டும். அப்போது தான் உணவு உறவுக்கு வழி திறக்கும்.

**சுவாமி ஜீவா போல் அ.ம.தி.**

உபஆகமம் 8: 2–3, 14–16 – அப்பத்தினாலன்று இறைவார்த்தையே உயிர்.
1 கொரி 10: 16–17 – பலராயினும் ஒரே உடலாய் உள்ளோம்.
அரு. 6: 51–58–இவ்வுணவைத் தின்பவன் என்றும் வாழ்வான்.

### கலைநிலா

## ஆலயவிழாக்களில் கலைநிகழ்ச்சிகள்

ஆலயத் திருவிழாக்களில் விழாவன்று மாலையில் கலைநிகழ்ச்சிகளை நடாத்தும் வழக்கம் எம்மத்தியில் இருந்து வருகிறது. ஒரு நாட்டுக்கூத்தை மேடையேற்றுவதே மரபாயிருந்த போதிலும் வேறு நாடகங்களும், சிறுவர் நடன நிகழ்ச்சிகளும் அத்துடன் இணைக்கப்பட்டு விழா கலகலப்பாக்கப்படுவது வழக்கம். இம்மரபு பல நன்மைகளைக் கொண்டது.

— பங்கிலுள்ள சிறுவர் சிறுமியின் ஆற்றல் வளர்ச்சிக்கு இடங்கொடுப்பது.
— பங்கிலுள்ள கலைஞர்களின் திறமை வெளிப்பாட்டிற்கு களங்கொடுப்பது.
— பங்கிலுள்ள பலதரப்பட்டோரையும் குறிப்பிட்ட விடயத்தில் ஒன்றிணைய பயிற்றுவது,
— ஆலயத்திருவிழா தரும் மகிழ்ச்சியை வீண் களியாட்டங்களில் அல்லாமல் சிந்தனைக்கும், அழகுணர்ச்சிக்கும் வளர்ச்சி தரும் வகையில் செலவிடுவது.

இவ்வாறாக இது தரும் நன்மைகளின் பட்டியல் மிகவும் நீண்டது.

இத்தகைய எதிர்பார்ப்புகளுடன் இருந்த எனக்கு அண்மையில் காணக்கிடைத்த ஒரு ஆலய கலைநிகழ்ச்சிகள் பெரும் ஏமாற்றத்தைத் தந்தன. கலைநிகழ்ச்சிகளில் இரண்டு நாடகங்களும், ஒரு நாட்டுக்கூத்தும் இடம் பெற்றன. நாடகங்களின் கதையமைப்பு மூன்றாம்தர தமிழ் சினிமாக்கதையமைப்பை ஒத்திருந்தன. அத்துடன் அவர்கள் ஒரு தமிழ் திரைப்படத்தையே மேடையில் காட்ட முனைந்தனர். ''சுப்பர் ஸ்டாரு யாருன்னு கேட்டா...'' என்றும் ''எங்கிட்ட மோதாதே...'' என்றும் சினிமாப்பாடல்கள் டேப்பில் ஒலிக்க விடப்பட்டு அரவணைப்புக்களுடன் காதல் நடனங்களும் ஆடிக்காட்டப்பட்டன. நாட்டுக்கூத்தும் கூட பழைய புனிதத்தன்மையை இழந்திருந்தது. காப்பு ஆலயத்திலேயே பாடப்பட்டாலும் நாடக மாந்தரில் சிலர் கூத்தின் இசையால் அல்ல, குடிவெறியால் மேடையில் தள்ளாடியதை அவதானிக்க முடிந்தது. நிகழ்ச்சிகளைப் பார்க்க வந்திருந்த ஆர்வலர்கள் பலர் இவற்றைக் கண்டித்தனர். –மதி




## இரண்டாம் பக்கங்கள்

ஒவ்வொரு நாணயத்திற்கும்
இரண்டு பக்கங்கள் உண்டு என்பார்கள்.
ஒவ்வொரு நாளிற்கும்
இரவும் உண்டு பகலும் உண்டு.
மடிவிலே உயிர்ப்பு நிகழ்வதும்
உயிர்த்து வந்தது வாடி இறப்பதும் இயல்பு.
இது
திருச்சபை முதல் மூன்று நூற்றாண்டுகளில்
சந்தித்த கலாபனைகளிலும் சரி,
மிலான் அரச சாசனம் கொடுத்த சுதந்திரத்திலும் சரி,
உண்மையாகவே இருந்தது.
மிலான் அரசசாசனப்படி திருச்சபைக்கு
சுயாதீனம் கிடைத்தது.
பறிக்கப்பட்ட பொருட்களும், உரிமைகளும்
திருப்பி வழங்கப்பட்டன.
குருக்களுக்கு வரிவிலக்கும்
பொது ஊழியப் புறநடையும்
மதிப்பும், மரியாதையும் வழங்கப்பட்டன.
உபகாரச் சம்பளமும்
லாத்தரன் மாளிகையும்
பாப்புவிற்குக் கிடைத்தன.
சிறு செபக்கூடங்களுக்குப் பதிலாகப்
பெரும் ஆலயங்கள் கட்டப்பட்டன.
வீடுகளிலும், கல்லறைகளிலும், வனாந்தரங்களிலும்
பயத்துடன் வழிபட்டவர்கள்
பகிரங்கமாகவும், ஆடம்பரமாகவும்
ஆலயங்களில் வழிபடத் தொடங்கினர்.
ஞாயிற்றுக்கிழமை
பரிசுத்த விடுமுறை நாளெனப் பிரகடனப்படுத்தப்பட்டது.
அஞ்ஞான உரோமையின்
சிசுக்கொலை
அடிமை வியாபாரம் போன்ற பழக்கவழக்கங்கள்.
படிப்படியாகக் களையப்பட்டு
கிறிஸ்தவ விழுமியங்கள் பேணப்படும்
கிறிஸ்தவ அரசு தோற்றம் பெற்றது.
ஆனால்
இதே சாசனம்
பிற்காலத்தில் பல பிரச்சினைகளுக்குக் காரணமாயிருந்தது.
ஆன்மீகத்தில் உறுதியாயிருந்த திருச்சபையினுள்
இலௌகீகம் நுழையக் காரணமாயிருந்தது.
சக்கரவர்த்திகள்
திருச்சபையின் நிர்வாகத்திலும்
சங்கங்களின் தீர்மானங்களிலும்
செல்வாக்குச் செலுத்த வழிவகுத்தது.
தமக்குச் சார்மாணவர்களை
ஆயர்களாகவும்
பாப்பரசராகவும் நியமிக்க
அவர்கள் பல சதிகள் செய்தனர்.

இவ்வாறே
முதன் மூன்று நூற்றாண்டுகளிலும்
திருச்சபைக்கு பல துன்பங்களைக் கொடுத்த,
5 மில்லியனுக்கும் அதிகமானோரின் உயிர்களைப் பறித்து
பலத்த பொருள் இழப்புக்கும், வேதனைகளுக்கும் காரண
மாயிருந்த, கலாபனைகளுக்கும்
சிறந்ததொரு இரண்டாம் பக்கம் உண்டு.
வேதனைகள் வேரறுப்புக்களாக அல்லாமல்
கிளைகழிப்புக்களாக மாறின.
தியாக வாழ்வையும்
தாராள மனதையும்
திருச்சபைக்குத் தானமாகக் கொடுத்தன.
வேதசாட்சிகளின் வீரமும், துணிவும்
கலாபனைக்காரரைக் கூட மனமாற்றி
திருச்சபை விரைவாகப் பரவ வழி செய்தன.
அவர்களுடைய இரத்தத் துளிகள்
திருச்சபையின் வித்துக்களாகவே
உலகமெங்கும், சிதறப்பட்டன.

—சந்திரன்—

---

## சிதறிய சிந்தனை

நடத்தை என்பது கண்ணாடி. அதில் ஒவ்வொருவரும், தமது பிம்பத்தைக் காட்டுகின்றனர்.

— கெதே

---

# திருவழிபாடும் திருஇசையும்

அருட்திரு. கு. யே, அன்ரனிபாலா

**முன்னுரை**

எனது குருமட வாழ்வின் விடுமுறைக் காலங்களில் பல்வேறு பணித்தளங்களுக்குப் பாடல் பயிற்சி கொடுப்பதற்காகச் சென்றதன் பயனாகக் கிடைத்த பல்வேறு அனுபவங்களினூடாகவும் வேறு பலரின் அனுபவங்களை இணைத்தும் இந்த ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பிக்க முன்வந்துள்ளேன். இன்றைய எமது நாட்டுக் கத்தோலிக்க தமிழ்மண்ணில் இடம்பெறும் திருவழிபாடுகளில் பாடகர் குழாம்களின் பங்களிப்பினை அதிகமாகப் பலரும் ஆய்வு செய்யப் பின்நின்றமையினாலும், இசைத்துறையில் எனக்குள்ள ஆர்வத்தினாலும் வருங்காலத்தில் எமது வழிபாடுகளில் மக்களின் மனமொன்றித்த பங்குபற்றுதலைக் கவனத்திற்கொண்டும் இந்த ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பிக்கின்றேன். 1989-ம் ஆண்டு ஜூன் மாதத்தின் ''இறையியல் கோலங்கள்'' என்னும் சஞ்சிகையில் வெளிவந்த ''வழிபாட்டில் பாடகர் குழாம்களின் பங்களிப்பு'' என்ற எனது கட்டுரையின் தொடர்ச்சியாக இதனை சமர்ப்பிக்கிறேன்.

இக்கட்டுரை மூன்று பகுதிகளாக வெளிவருகின்றது. முதலாவது பகுதியில் வழிபாட்டில் திரு இசைக்குழாமின் பங்களிப்புப் பற்றியும், அதனையொட்டிய இரண்டாவது பகுதியில் எமது வழிபாடுகளில் கர்நாடக இசையின் வளர்ச்சி பற்றியும் மூன்றாவது பகுதியில் எமது யாழ். மறைவட்ட திருவழிபாட்டு நிலையம், திருவழிபாட்டிற்கும். திருஇசைக்கும் ஆற்றும் சேவைபற்றியும் கூற விழைகிறேன். இதோ முதற் பகுதிக்கு வருவோம்.

**வாழ்வும் வழிபாடும்**

இறைமக்கள் யாவரும் ஒரே குடும்பமாகச் சேர்ந்து பலவித வெளி அடையாளங்களின் மூலம் இறைவனுக்கு நன்றியையும், புகழ்ச்சியையும் செலுத்தி கிறிஸ்துவிலே தம்மைப் புனிதமாக்கி மீட்பின் மறைபொருளைப் புதுப்பித்து தமது நாளாந்த வாழ்வைப் பலிப்பீடத்திலே கொண்டுவந்து சிறந்த பலிப் பொருளாகிய இறைமகனுடன் சேர்த்துத் தந்தைக்கு அளித்து எதிர்கால வாழ்வை வாழவேண்டிய சக்தியைப் பெற்றுச் செல்லும் செயலே வழிபாடாகும். இஸ்ராயேல் மக்கள் செய்தது போன்று, கடந்தகால வாழ்வின் இன்ப துன்ப அனுபவங்களின் விளைவுகள் தாக்கங்களினூடாக உறுதிப்படுத்தப்பட்ட விசுவாச வாழ்வை, நினைவு கூர்ந்து இறைவனுக்குக் காணிக்கையாக்குகிறோம், பாஸ்கா மறைபொருளாகிய கிறீஸ்துவுடன் சேர்ந்து எம்மையும் ஏற்கும் இறைவன் தமது மகனையே எமக்கு ஆன்ம உணவாகத் தந்து எதிர்கால வாழ்வை வாழும் சக்தியைத் தருகிறார். எனவே வழிபாடு வாழ்வின் அனுபவங்களால் அர்த்தம் பெறுகின்றது.

**வழிபாட்டில் திருஇசை**

இயற்கையில் எழுந்த 'ஓம்' என்ற ஒலிமூலம் ஆதியிலே இறைவனை அனுபவித்த மனிதன், மூங்கிலிலே எழுந்த நாதம் கண்டு அதனை ஓர் கருவியாக்கி இறைவனை வழிபட்ட மனிதன் இன்று சுரங்களின் இசையிலே எழுகின்ற இசையிலே மெய்மறந்து இறைவனோடு தியானத்தில் மனமொன்றிக்கும் அளவிற்கு வளர்ச்சி பெற்றுவிட்டான். இசையானது மனிதனின் தனிமையைப் போக்குகின்றது. எந்த ஒரு கல்லான இதயத்தையும் கரைத்து மனதில் அமைதியையும், சாந்தத்தையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்துகின்றது. கல்லான இதயத்தை எடுத்துவிடுகின்ற இறைவனின் பணியை மனிதன் ஆற்ற முன்பு இசையே ஆற்றி விடுகின்றது எனவே வழிபாட்டில் மக்களின்மனமொன்றித்தபங்குபற்றுதலுக்கு திருஇசை மிகவும் இன்றியமையாதது. விசேடமாக வழிபடுவோரின் மொழி, இனம், கலை கலாச்சாரப் பின்னணிக்கேற்ப இறைவனின் முன் எல்லோரையும் ஒரே குடும்பம் என்ற உணர்வில் ஒன்றிக்கச் செய்வது திருஇசையாகும்.

இன்றைய எமது நாட்டுக் கத்தோலிக்க தமிழ் மண்ணில் இடம்பெறும் திருவழிபாடுகளில் பாடல்கள், சங்கீதங்கள், பஜனைகள், தியான இசைகள் முக்கிய இடம்பெறுகின்றன. திருவழிபாடு விசேடமாக ஒவ்வொரு திருப்பலிக்கொண்டாட்டமும் சிறப்புற அமைய வேண்டுமாயின் அதிலே பாடப்படும் பாடல்கள் அர்த்தமுள்ளதாக எல்லோரும் சேர்ந்து பங்குபற்றிப் பயனடையும் விதத்தில் அமையவேண்டும். உண்மையை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ள வேண்டுமாயின் இன்று பல பங்குகளில் இடம்பெறும் வழிபாடுகள் அர்த்தமற்றவைகளாக அமைவதற்கு முக்கிய காரணம் திருஇசைக் குழாம் அங்கத்தவர்கள் என்பதே என் ஆணித்தரமான கருத்தாகும்.

**திருஇசைக் குழாம்களும் திருவழிபாடும்**

திருவழிபாட்டை அர்த்தமுள்ளதாக ஆக்கவேண்டுமாயின் திருஇசைக்குழாம்கள் பல வழிகளில் தமது பங்களிப்பை வழங்க முடியும். முதலாவதாக அடுத்த பங்குக் குழுவை வென்று புகழ் ஏணியிலே ஏறிவிடவேண்டும் என்ற போட்டி மனப்பான்மை தவிர்க்கப்படவேண்டும். வழிபாட்டின் மையக் கருத்தைக் கவனத்தில் கொள்ளாது பாடல்களைத் தாம் விரும்பியபடி தேர்ந்தெடுத்துப் போதிய பயிற்சியின்றிப் பாட முயற்சிப்பது தவிர்க்கப்படவேண்டும். பழையவை என்ற ஒரே காரணத்தினால் கருத்துள்ள அதேவேளையில் மிகவும் பொருத்தமான இசையிலமைந்த பழையபாடல்களைத் தள்ளிவிட்டுப், புதிய புதிய பாடல்களைப் பாடிச் சேர்த்துக்கொண்டு செல்வது தவிர்க்கப்படவேண்டும். அண்மைக் காலங்களில் வெளிவந்த பெரும்பாலான பாடல்கள் கருத்தாழமற்றவையாகஇசைப் பொருத்தமற்றனவயாகக் காணப்படுகின்றன .ஏறக்குறைய எல்லாப் பங்கின்பாடகர் குழாம்களும் திருப்பலியின் கருத்தினை உணர்ந்து பொருத்தமான பாடல்களை மட்டுமே தேர்ந்தெடுத்துப் பயிற்சிபெற்றுப் பாடும் திறமையற்றனவாகக் காணப்படுகின்றன. இதற்கு, மறையறிவும், இசையறிவும் அற்ற நிலையே காரணமாகும். ஆனால் ஒரு சில பங்குகள் இச் செயற்பாட்டில் முன்னணியில் நிற்பதை நான்பாராட்டுகிறேன். பெரும்பாலான இடங்களில் திருவழிபாடுகளில் பங்கெடுப்பதற்கும், பயிற்சிக்கு வருவதற்கும் பின்நிற்பது வழிபாட்டிற்குப் பிந்திவருவதென்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். வழிபாடு செய்வதற்குத் தகுந்த ஆயத்தம் தேவை என்பதை உணர்ந்து அங்கத்தவர்கள் சிலர் வழிபாட்டுக்குழுவில் பங்குபற்றுவது அவசியம்.

**மறையறிவும் இசையறிவும்**

தமது சிறியவயதில் பெற்ற மறைக்கல்வியைத் தவிர திருஇசைக் குழாம் அங்கத்தவர்கள், இறைவார்த்தை, திருவழிபாட்டியல், திருச்சபையின் படிப்பினைகள் போன்றவற்றில் போதிய பயிற்சிபெற வேண்டும்.எடுத்துக்காட்டாகத் திருவிருந்துச் சடங்கை எடுத்துக் கொண்டால் அங்கே இறைவன் தனது மகனின் உடலையும், இரத்தத்தையும் எமக்குப் பிட்டு நொறுக்கிஉடைத்து உணவாகத்தருகிறார் அதைத் தகுதியோடு உண்டால் உயிர் பிழைத்து வாழ்வின் எந்தச் சவால்களையும் ஏற்று வாழ முடியும். ''இதை என் நினைவாகச் செய்யுங்கள்'' என்ற அவரின் வார்த்தை மூலம் எம் வாழ்க்கைப் பலியில் ஒவ்வொரு நிமிடமும் அவர்தரும் மீட்பினை நினைவு கூரும்படி அழைக்கின்றார். பாஸ்காக் கடத்தலும்,மன்னாவும், வானினின்று இறங்கிவந்த உயிருள்ள உணவிற்கு ஓர் முன்னடையாளம் போன்ற கருத்துக்கள் தென்படும் படியாகப் பாடல்கள் அமையவேண்டும். இந்த வகையில் ''உங்களுக்காகக் கையளிக்கும்,'' ''இறைவன் தரும் அன்புவிருந்து,'' ''நானே வானினின்று'' போன்ற பாடல்கள் சிறந்த கருத்தையும்,இசையையும் கொண்டுள்ளன. ஆனால் ''இராக தீபங்கள்,'' ''அன்பில் விளைந்த'', ''யேசு என்னில் வருகின்றார்'' போன்ற பாடல்கள் கருத்தாழம் அற்றவைகளாகக் காணப்படுகின்றன.

இசையறிவு என்று கூறுகின்றபோது பாடும்போதும் கலைநயமும், தாளமும், இசையும் அப்பாடல்களின் கருத்துக்கு

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

# உயிர்ப்பின் விழிப்பு

## சிறுகதை

இயற்கை தன்னைச் சமைத்த நாளிலிருந்து ஓய்வு ஒழிவின்றிக் கலகல வென்னும் நளின ஓசையுடன் வீழ்ந்து கொண்டிருக்கும் அந்த மலையருவி, காண்போர் கண்களுக்கு விருந்தூட்டுவது மட்டுமல்ல, காட்டின் உயிரினங்களுக்கும், காட்டை நம்பிய தொழிலாளர்களுக்கும் அமுதூட்டும் ஜீவநதியாக அமைந்திருந்தது.

கதிரவனின் கொடுங்கதிர் தன்னுடலைப்பிளக்க, அக்கதிர்மூலம் வியர்வை உடம்பில் ஆறாய் ஓட, விறகுகளைப் பிளந்து, சுமந்து விற்கும் ஏழைத் தொழிலாளிதான் யோசேப். சுனையின் நீரிலே கஞ்சி காய்ச்சிக் கணவனுக்கு அமுது படைத்து, விறகுகளை, ஊர் சுமந்து வாழ்க்கையை ஓட்டிக்கொள்வதில் உறுதுணையான இல்லத்துணையாவள் அன்னம்மா வளமை போலக் கஞ்சி அருந்தி பசியாறி விட்டுக் கணவன் ஏற்றிவிட்ட விறகுகளைத்தலையில்சுமந்தபடி வீடு நோக்கிப் பயணமாகின்றாள் அன்னம்மா. மண்ணில் கிடந்த பாறாங்கல்லொன்று அவளின் சோர்ந்து போன காலிலிடற கீழே சாயப்போகும் அவளின் நிலைகண்டு அவளை, ''அன்னம்மா'' என்று ஓடி வந்து தாங்கிப் பிடிக்கின்றன யோசேப்பின் கரங்கள். கர்ப்பிணியான அவளை விறகு சுமக்க வைத்து விட்ட தன் ஏழ்மை நிலையை எண்ணி வருந்துகின்றது அவன் உள்ளம்.

✱✱✱✱✱✱✱✱✱✱✱

**P. டெய்சி**
அச்சங்குளம்

✱✱✱✱✱✱✱✱✱✱✱

அடிவயிற்றைப் பிடித்துக் கொண்டு முனங்கினாள். ''ம்... இடு ... ப் ... பு ......... வலி'' அன்னம்மா இப்போது நிறை மாதக்கர்ப்பிணி. முதற் கர்ப்பத்தில் இருந்த குழந்தை குறைப்பிரசவம் என்று அவளை விட்டு மறைந்து விட்டது. இரண்டாவதாக இறைவன் தரும் இச்சிசுவுக்கும் சோதனை வந்து விட்டதே, என மன முருகி அழுதவன் மருத்துவ உதவிக்கு ஆலாய்ப் பறக்கின்றான். சிறகில்லாத அவன் பறந்து என்ன பண்ண? ஏறத்தாழ ஒரு மைல் தொலைவிலிருக்கும் தன் ஊருக்குப் போய் மருத்துவ மாதுவைக்கொண்டு வருவதற்குள் மனைவிக்கு ஏதும் ஆகிவிடக் கூடாதேயென்று இருதலைக் கொள்ளியெறும்பாய்த் தவித்தான்.

ஆண்டவனிடம் அபயக் குரலெழுப்பி அழுதபடி நின்ற யோசேப்பின் கண்கள். அது சமயம் அங்கு வந்த அந்தோனியைக் கண்டு சிறிது மனத்தேறுற்றன. கடவுளின் அருளென்றே எண்ணி வியப்புறவும் செய்தான். வந்து கொண்டிருந்த அந்தோனியிடம் பாய்ந்தோடியவன் ''அந்தோனி என் மனைவிக்கு உயிர் கொடுக்க ஆண்டவன்தான் உன்னை அனுப்பி வெச்சிருக்காரு'' என்று நடந்ததைக் கூறிக் கதறவே, அந்தோனியும் விறகு ஏற்ற வந்த தன் வண்டியில் அவர்களை ஏற்றிக்கொண்டு மின்னலென ஊர் நோக்கிப் பறந்தான். வேதனையால் துடிக்கும் மனைவிக்கு ஆறுதலும், அபயமும் கூறித் தன்னுயிரைக்கையில் பிடித்தவாறு குமைந்தான் யோசேவ்.

அரை மணிக்குள் அந்தோனி தனது ஊர் நாட்டு மருத்துவ மாதுவை அழைத்து வந்த சிறிது நேரத்தில் அன்னம்மா அழகிய ஆண் குழந்தையொன்றை ஈன்றெடுத்தாள். ''ஆண் குழந்தை'' என்ற மருத்துவ மாதுவின் குரல் கேட்டதும், ஜெபத்திலும், பயத்திலும் ஒன்றித்து நின்ற யோசேவ் பாய்ந்தோடிக் குழந்தையை நெருங்கினான். இறைவனின் கைவண்ணம் மிகுந்த சிருஷ்டியைக் கண நேரம் கண்டு களித்த யோசேவ் கண்களில் ஆனந்த நீர் சொரிய ஆண்டவனுக்கு நன்றி செலுத்தினான். ஆனால் அவர்களின் ஆனந்தம் அதிக நேரம் நீடிக்கவில்லை.

குழந்தையைக் கையிலணைந்த மருந்துவமாது நம்பிக்கையற்ற குரலில், ''குழந்தை அதிக நேரம் தாக்குப்பிடிக்காதுபோல் தெரிகின்றது. மூச்சு, சன்னமாகத்தான் வருகிறது நாடியும் சரியில்லை. சீக்கிரம் குழந்தையை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லுங்கள். அது வரை குழந்தை உயிரோடு இருக்குமோ, இருக்காதோ?'' என்று கூறினாள். ''ஆண்டவனே! இதென்ன சோதனை? இந்தப்பிள்ளையையும் பறிச்சிடாதேயப்பா?'' என்று கண்ணீரை வெள்ளமாகச் சொரிந்து கொண்டு அழுதான் யோசேவ்.

''என்னங்க! ஆஸ்பத்திரிக்குப் போய் விடலாமென்று நினைக்கின்றீர்களா? எனக்கு அதில் நம்பிக்கையில்லை. பாதி வழிலேயே குழந்தை இறந்து விட்டுதனா? எனவே அது நடு வழியில் சாவதைவிட நம் வேத மொறைப்படி ஞானஸ்நானம் பெற்று சம்மனசாப் போயிடட்டும்'' என்று வேதனையில் வெடித்தாள் அன்னம்மா. அதைக் கேட்ட அந்தோனி ''யோசேவ்! நான் போய் சுவாமியைக்கூட்டி வாறன்'' எனப் புறப்பட்டான்.

''குழந்தை சாவை எதிர் கொள்ளும் இவ்வேளையிலே நம்மில் யாராவது ஞானஸ்நானம் கொடுக்கலாமென்று நம் சத்திய மறையிலே கூறியிருப்பதை நீங்க காணவில்லையா?'' என்ற அன்னம்மாவின் கேள்வியினால் கண் திறந்த யோசேவ் ஓடிப்போய் நீரைப் பாத்திரத்தில் அள்ளி வந்து, திருச்சபையின் பெயரால் பரிசுத்த கருத்துக்களைக் கூறி ''இயேசுராஜ்'' என்ற பெயரை உச்சரித்து, குழந்தையின் தலையில் நீரை ஊற்றினான் நடப்பது யாவற்றையும் கவனித்தாள் மருத்துவ மாது. குழந்தையின் பக்கமாய் அவள் கண்கள் திரும்பின, மறுவினாடி ஆச்சிரியமடைந்தன. ''என்ன! குழந்தைக்கு நாடித் துடிப்பு சரியாயிட்டுதே குழந்தை பிழைத்து விட்டானே'' என்ற சொற்கள் அவள் வாயிருந்து வெளிவந்தன.

''என்ன குழந்தை பிழைச்சிட்டுதா? எங்கே என் குழந்தை?'' என்ற அன்னம்மாவின் சத்தத்தைக் கேட்ட யோசேவ் பாய்ந்தோடி குழந்தையை அவளிடம் அள்ளிக் கொடுத்தான். ''உயிருக்குப் போராடிய இக்குழந்தைக்கு இந்நீர் உயிர்விழிப்பு கொடுத்து விட்டது'' என்றாள் மருத்துவ மாது ''இல்லை, கர்த்தர்சேசுய எங்களுக்கு திருவருட் சாதனங்கள் வழியாக மனித புலன்களுக்கு அப்பாற்பட்ட விதமாய்த்தரும் அவரின் தெய்வீக அருள் தான் இந்த உயிரின் புதுத் துடிப்பு'' என்ற நம்பிக்கையைக் கூறுகையில் ஈன்ற பொழுதைவிட பெரும்மகிழ்வு அவளின் வதனத்தில் தேவ நன்றியுடன் மிளிர்ந்தது.

(யாவும் கற்பனையல்ல)


# எது அப்போஸ்தலத்துவம் ?

அன்பின் அடிப்படையில் கட்டி எழுப்பப்பட்டிருப்பது தான் கிறிஸ்துவின் திருமறை. அடிப்படை எவ்வளவு ஆழமாக இருக்கிறதோ, எவ்வளவு தாழ்வாக இருக்கிறதோ அவ்வளவு உறுதியாக இருக்கும் நமது மறைவாழ்வு. அன்பைப் பரப்புவதே திருமறையின் குறிக்கோள். உலக மக்கள் எல்லோரும் கடவுளை அன்பு செய்ய வேண்டும், என்பதே நமது விருப்பமாகவும் இருக்க வேண்டும். இன்றைய உலகத்தை உலகில் வாழும் மக்களைக் கிறிஸ்துவின் பக்கத்தில் கொண்டுவர அன்பைத் தவிர வேறு வழியே இல்லை.

அன்பின் ஆற்றல் பெரிது. பணத்தாலும், பலத்தாலும் சாதிக்கமுடியாதவற்றை எல்லாம் அன்பால் சாதிக்கலாம். அன்பைப் பற்றி கிறிஸ்து கூறுகையில் '' ஒருவன் தன் நண்பனுக்காக தன் உயிரைக் கொடுப்பதிலும் மேலான அன்பு எவனிடமும் இல்லை'' என்கிறார். கிறிஸ்து உலக மக்களை அளவில்லாத விதமாக நேசித்தார். இதை உணர வேண்டுமானால் சிலுவையை உற்றுப் பார்த்தால் போதும். சிலுவை — உண்மை அன்பை ஓயாமல் உரைத்துக் கொண்டிருக்கும் ஓர் ஒப்பற்ற சின்னம். உலகம் என்றுமே கண்டிராத எல்லையில்லா அன்பை எடுத்துக் காட்டும் ஓர் அரிய சாசனம். எட்டுத்திசையும் அன்பு ஒளி வீசித்திகழ்ந்து கொண்டிருக்கும் ஓர் அணையாத்தீபம். இதில்தான் கடவுள் மனிதனுக்காக உயிர்த்தியாகம் செய்து தன் அன்பை வெளிப்படுத்துகின்றார். உயிர்த்தியாகத்திற்கு துணிந்து நிற்பது அன்பு மட்டுமே. கிறிஸ்து கடவுள், அவரின் தெய்வீக உதடுகளிலிருந்து ஒரு வார்த்தை. அவரது அகன்ற நெற்றியிலிருந்து ஒருதுளிவியர்வை. அவரின் அழகுக் கண்களில் இருந்து ஒரு சொட்டுக் கண்ணீர். அவரது அன்பு இதயத்தின் ஒரு துடிப்பு. அவரின் தூய உடலிலிருந்து ஒரு துளி இரத்தம். இவற்றில் ஒன்று போதுமாயிருந்தது உலகின் பாவம் போக்க, அதை மீட்டுப் புனிதமாக்க. ஆனால் அவரின் அன்பு உள்ளம் இவற்றால் நிறைவுபெறவில்லை. அன்பு அன்பை எதிர்பார்க்கிறது. கிறிஸ்து மனிதர்களை அளவுகடந்த விதமாக நேசித்தார். ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னைப்போல் உலக மக்களை நேசிக்க வேண்டுமென்று விரும்புகிறார். ''நான் உங்களை நேசிப்பதுபோல் நீங்களும் ஒருவர் ஒருவரை நேசிக்க வேண்டும். இதுதான் கிறிஸ்து விரும்புவது, கற்பிப்பது அவர் விரும்புவதையும் கற்பிப்பதையும் செயல்முறையில் வாழ்க்கை நெறியில் நடத்திக்காட்ட வேண்டியது அவரின் அன்பனாகிய நம் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

மாபெரும் ஆலயம் எழுப்பி அங்கே என்னை வழிபடுங்கள் என்று சொல்லவில்லை. சிறந்த இடங்களிலே என் சிலையை அமைத்து அஞ்சலிசெய்யுங்கள் என்று சொல்லவில்லை. ஏன் என்னையே நேசியுங்கள் என்றும் சொல்லவில்லை. இவ்வாறான அரிய பெரிய காரியங்களை சாதிக்கச்சொல்லவில்லை கிறிஸ்து. ஆனால் 'ஒருவர் ஒருவரை நேசியுங்கள்'' என்றார். காரணம் ''நீங்கள் ஒருவர் ஒருவரை நேசித்தால் நீங்கள் என் சீடர்கள் என்று எல்லோரும்அறிந்து கொள்வார்கள்''. (அரு.13-35) இல் காண்கின்றோம். கிறிஸ்துவின் வீரனாக, அவரின் சீடனாக, அவரின் அப்போஸ்தலனாக விளங்க அன்பைத் தவிர வேறு வழியில்லை. மறைக்கொள்கைகளைப் போதிப்பதும், ஒழுக்க நெறிகளை விளக்குவதும்தான் அப்போஸ்தலத்துவம் என்று சிலர் எண்ணுகின்றார்கள். இவை அவசியமானவைதான். ஆனால் கிறிஸ்தவத்தின் அடிப்படையான சிநேகத்துடன் விளங்குவதுதான் சிறந்த அப்போஸ்தலத்துவம்.

**அந்தோனி யோகவதி.**
உயிலங்குளம், மன்னார்.



**புனித ரோமுவால்துஸ் ஜூன்19 (கி. பி. 950–1027)**

இவர் வாலிபத்தை ஆடலிலும், பாடலிலும் வேடிக்கை வினோதங்களிலும் கழித்தவர். இவருடைய தந்தை உறவினர் ஒருவரை கொன்று விட்டார். எனவே இவர் அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஒரு மடத்தில் இருந்து நாற்பது நாட்களாக கடும் தவம் புரிந்தார். பின்னர் அதே சபையை தழுவினார். தன்னுடைய தந்திர சோதனைகளை செபத்தாலும், தவத்தாலும் வென்றார். தான் தீர்க்கதரிசனமாக சொன்ன நாளிலே மரணமானார்.

**புனித கொன்சாகா ஞானப்பிரகாசியார்—ஜூன் 21 (கி. பி. 1568–1591)**

இவர் அரச குடியை சேர்ந்தவர். புனிதர் முதல் முதலாக பேசத் தொடங்கியபோது ''இயேசுமரி'' என்று சொன்னார். இவர் தன் வாழ்க்கை பூராகவும் கற்பை காத்தார். துறவி எந்த ஆடலிலும் பாடலிலும் கலந்து கொள்வதுமில்லை, எந்தப் பெண்ணையும் கண்கொண்டு பார்த்ததுமில்லை. அடக்க ஒடுக்கமாக நடந்தார். எனவே ''சரீரம் உள்ள சம்மனசு'' எனப்படுகின்றார். கொள்ளை நோய்க்கு உதவி செய்ய உரோம் சென்று நஞ்சு காச்சலால் பீடிக்கப்பட்டு மரணத்தை முன்னறிவித்து இறந்தார்.

**புனித நோலா பவுலீனுஸ்—ஜூன் 22 (கி. பி. 354–431)**

இவர்பிரான்ஸ்சில் போத்தோ என்னும் நகரருகே பிறந்தவர். ஆயர் கலைஞனும், பேச்சாளனுமாவார். அத்துடன் ஆளுனன் ஆகவும் பணிபுரிந்தார். இவர் கிறீஸ்தவப் பெண்ணை மணந்த பின் 385 இல் மெய்மறையைத் தழுவினார். இவர்களுடைய மகன் இறந்த பின்னர் இருவரும் ஸ்பெயின் சென்றனர். இவர்களின் பக்தியைக் கண்ட மக்கள் துறவறத்தில் சேரும்படி தூண்டினர். எனவே இவர்கள் உடமைகள் எல்லாவற்றையும் ஏழைகளுக்கு கொடுத்துவிட்டு துறவறம் பூண்டனர். இவர் 40 ஆண்டுகள் ஆயராக இருந்து மரித்தார்.

**புனித ஸ்நாபக அருளப்பரின் பிறப்பு. ஜூன் 24**

இவர் கபிரியேல் தூதன் சக்கரியாசுக்கு கூறியபடி எலிசபெத்தம்மாளுக்கு பிறந்தார். தூதன் கூறியபடியே அருளப்பன் எனப் பெயர்பெற்றார். புனிதர் சிறுவயதிலே வனம் சென்று வெட்டுக்கிளியை உண்டும், காட்டுத் தேன் குடித்தும், ஒட்டகமயிராடையை உடுத்தும் வாழ்க்கை நடத்தினார். இவர் கிறீஸ்துவின் வருகைக்கு முன்னோடியாகயிருந்து அவர் பாதையை செம்மைப்படுத்தினார். ''யேசு வளரவேண்டும், நான் குறைய வேண்டும்'' என்று தன்னைத் தாழ்த்தி கூறினார். பின் ஏரோதால் சிரச்சேதம் செய்யப்பட்டார்.

**S. S. கருணைதாஸ்**
அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை

# "கனி கொடுக்கும் கிளைகளை மேலும் கனிகொடுக்கும்படியாகத் தறிப்பான்"

''சோதனைமேல் சோதனை போதுமடா சாமி ..'' இது தற்கால கவிஞனின் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து உதிர்ந்த மொழிகள். இன்பமும் துன்பமும் ஒரு நாணயத்தின் இருபக்கங்களைப்போல் மாறி மாறி மானிடரின் வாழ்க்கையில் நிகழுகின்ற அம்சங்கள், இன்பம் வரும்போது இறைவனைப்புகழும்மானிடன் துன்பம் வரும்போது இறைவனைத் தூற்றுகிறான். அவர் மேல் விசுவாசம் அற்றவனாக வாழுகின்றான். இறைவன் உண்மையில் இருக்கின்றாரா? இறைவனுக்குகண் இல்லையா? என்று எத்தனையோ கேள்விகளைத் தனது உள்ளத்தில் இருந்து எழுப்பி அதற்கு விடைகாண முடியாது தத்தளிக்கின்றான்.

என்று இறைவாக்கினர், நீதிபதிகள் ஊடாக பேசிய இறைவன் இன்று தற்காலிக நிகழ்ச்சிகளினூடாக எம்முடன் பேசுகின்றார். இன்றைய கால கட்டத்திலே மனிதன் துன்பங்கள்மேல் துன்பங்களை அனுபவித்து மரணவேதனையின் விளிம்புக்கு தள்ளப்பட்டுள்ளான். ''சாவா? வாழ்வா? விடைசொல்ல நீவர்'' என்று இறைவனையே அழைக்கின்றான். இறைமகன் யேசு நானே உண்மையான திராட்சைக் கொடி. நீங்கள் அதன் கிளைகள். கனி கொடாத கிளைகளைத் தறித்துவிடுவார். கனிகொடுக்கும் கிளைகளை இன்னும் மிகுந்த கனிதரும்படி தறித்துவிடுவார்.'' என்றார். கடவுள் நல்லவர்களை இன்னும் நல்லவர்களாக்கும் நோக்குடன்தான் அவர்களைத் தண்டிப்பார். கடவுள் தன்னை அன்பு செய்யும் நல்ல கிறிஸ்தவர்களுக்கு துன்பத்தை அனுமதிக்கிறார். அவர்கள் துன்பத்தில் துவளும் போது அதைக்கண்டு இன்பம் கொள்ள அல்ல, மாறாக அவர்களை நல்லவர்ளாக்க, விசுவாசத்தை உறுதிப்படுத்த அவர்கள் இன்னும் நெருங்கிய முறையில் தன்னண்டை அண்டிவரச்செய்ய துன்பங்கள் வழியாக அவர்களது பாவங்களுக்குப் பரிகாரம் செய்து அவரது மீட்புப்பணியில் அவர்களும் பங்கு பெறவும் துன்பங்களை அனுப்புகின்றார். புனித சின்னப்பர் ''கடவுள் யாரை நேசிக்கிறாரோ அவர்களைத் தண்டிக்கின்றார். யாரை தம் பிள்ளைகளாக சுவீகரிக்கிறாரோ அவர்களைக் கசையால் அடிக்கின்றார்.'' என கூறினார் சின்னப்பர். தனது வாழ்க்கையில் எத்தனையோ துன்பங்களை அனுபவித்தார். ஆனால் அவர் கடவுளை மறுதலிக்கவில்லை. இயேசுவின் மேல் வைத்த விசுவாசம் அவரது உயிரைக் கொடுக்கும் அளவிற்கு அவரை இட்டுச் சென்றது. ''பொன் நெருப்பினால் புடமிடப்படுவது போல் என் விசுவாசமும் துன்பத்தினால் சோதிக்கப்பட வேண்டும்.'' என்று இராயப்பர் கூறுகின்றார்.

துன்பங்கள் கிறீஸ்தவர்களின் வாழ்வில் இன்றியமையாத கூறுகள். ''ஒருவன் என்னைப் பின் செல்ல விரும்பினால் தன் சிலுவையை நாள்தோறும் சுமந்து கொண்டு என்னைப் பின் செல்லட்டும்.'' ''என் வழியாய் அன்றி எவனும் பரமதந்தையிடம் செல்ல முடியாது'' என இயேசு கூறினார். நாம் எமது

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## ஆடைகளுக்குப் பாடை கட்டுவோம்




ஓர் உயர்தர நீதிமன்ற நீதிபதியும் நானும் ஒரு நாள் ஒரு கார்மேல் மட ஆலயத்தினுள் சென்று திரும்பினோம். அரைகுறை ஆடையணிந்த ஓர் பெண் ஆலயத்தினுள் வந்தாள். இதைப் பார்த்த அவர், ''கெட்ட பெண்களும் கோவிலுக்குச் செபம் செய்ய வருகின்றனர்'' என்றார். உண்மையில் அப்பெண் கெட்டவள் அல்ல. சிந்திக்காமல் ஆபாச உடையில் கோயிலுக்குள் வந்தவள். இப்பெண்ணின் ஆபாச உடை இவர் பொதுவாக அதிருப்தி கொள்ளும் அளவாக அமைந்து விட்டது. இவர் கன்னியர் செபம் செய்வதைப் பார்க்கவில்லை. புத்தியில்லாத ஒரு பெண்ணைப் பார்த்து இதுதான் திருச்சபையா? என்று நீதிபதியே எண்ணலானார் என்றால் பாமரமக்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? எனவே இத்தகைய நிலையில் நாம் இருக்கக் கூடாது. அன்புச் சகோதரிகளே! கோயிலுக்கு வரும்போது ஆகிலும் அடக்கமான ஆடையணிந்து வருக! கூடுமானால் ஆபாச ஆடைகளுக்குப் பாடைகட்டி விடுங்கள்.

மூலம்: Witnesses of Christ.

## இளைஞர்களே சற்று நில்லுங்கள் !...

வாழ்க்கை என்னும் கடலினிலே
நீந்தத் துடிக்கும் இளைஞர்களே !
நீச்சல் தெரியாது குதிக்காதே.
வாழ்வு மடியும் அதனாலே.

தந்தை தாய் சொற் கேட்டு
பணிவாய் நடந்திடக் கற்றிடுங்கள்.
மூத்தோர் பெரியோர் அன்புடனே
வாழ வழி சமைத்திடுங்கள்.

உலகம் உங்களைப் போற்றிடவே
அன்பு, சாந்தம், பொறுமை என்னும்
அணிகலன் தனை அணிந்திடுங்கள்.
அதனால் சிறக்கும் உன் வாழ்வு

இறையருள் நன்கு பெற்றிடவே
பணிவுடன் இறைவனைத் துதித்திடுங்கள்.
உங்கள் வாழ்வு வளமாக இறை
வார்த்தை தனை வாழ்ந்திடுங்கள்.

அ. சுரேந்திரறாஜ்
சில்லாலை.

## மங்கையர்க்கு மணிமொழிகள்

★ அன்பும், அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது.

★ பணத்திற்காக மணம் செய்யாதே.

★ திருமணம் என்பது இசையா? நகையா? மாலையா? பந்தரா? விருந்தா? இல்லவே இல்லை. இருவரினதும் மனம் ஒன்றாவது தான் மணம்.

★ திருமணமானவர்கள் சமூகத்திற்கு செய்யவேண்டிய கடமையை மறக்கலாகாது.

★ மாமியாரும் ஒரு வீட்டு மருமகளே.

★ மணவாழ்வில் சந்தேகம் என்பது அனைத்தையும் அழித்துவிடும் ஒரு கொள்ளை நோய்.

# 1990களை நோக்கி....... தூரத்துப்பார்வை
## அமதிகள் மாநாடு

இப்பகுதியில் வெளியாகும் கருத்துக்கள் சிந்தனைகளுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.

மாநாட்டின் முந்துரிமைகள் 9

மாநாடு நடத்த வேண்டுமென்ற தீர்மானத்தை வாக்கெடுப்பின் மூலம் முடிவு செய்த யாழ் அமதிகள், சென்ற சித்திரைத் திங்களில் (1989) நடைபெற்ற மாநாடு ஆயத்தக் கருத்தரங்கில் தங்களுடைய முக்கிய தேவைகளைத்தேர்ந்தெடுத்தார்கள். இத்தேர்வும் ஒரு வாக்கெடுப்பு மூலமே நடைபெற்றது

தொடர் (படிமுறை) உருவாக்கம் (ongoing formation) சிறப்புப் பணிகள் (specialzed ministries), திருவார்த்தை எடுத்தியம்பும் பணி (preaching missions and retreats), சமூ வாழ்வு (community life) –என்று நான்கு முக்கிய துறைகளை முதல் முந்துரிமைகளாக (top priorities) கோடிட்டுக் காட்டினார்கள். இவர்களுடைய முந்துரிமைகளையிட்டு விமர்சிக்க முன்னர், இடையில் நடைபெற்ற ஒரு முக்கிய செய்தியை ஈண்டு குறிப்பிட வேண்டும்.

மாகாணப் பிரகடனம்

அனைத்து அமதிகளின் குரு முதல்வர் பேரருட் திரு மார்செல்லோ சாகோ, அ. ம. தி. அவர்கள் முதன்முறையாக சென்ற ஆவணித் திங்களில் யாழ்நகர் வந்திருந்தார். இந்த வருகையைப் பயன்படுத்திக் கொண்டு, அவர் வடபகுதி அமதிகளின் ஆணைப் பேராண்மையை (Delegation) ஓர் உப மாகாணமாக (Vice province) உயர்த்தி உள்ளார். நிர்வாக அதிகார ரீதியாகப் பார்க்கும் பொழுது, அனைத்து உரிமைகளையும் பெற்ற ஒரு மாகாணமாகவே வடபகுதி அமதிகளின் அமைப்பு செயல்படும் வடபகுதி அமதிகளின் ஒன்றரை நூற்றாண்டு வாழ்வில் இந்தப் பிரகடனம் ஒரு முக்கிய திருப்பு முனை என்பது இவ்விடத்தே குறிப்பிடப்பட வேண்டும்.

உருவாக்கம்

பானையில் இருந்தால்தான் அகப்பையில் வரும் என்பார்கள், ஒருவரிடம் இல்லாத ஒன்றை இன்னொருவருக்குக் கொடுக்க முடியுமா? திருச்சபையிலும் இந்த சிந்தனையை அடிப்படையாக வைத்து ஒரு முக்கிய மாற்றம் ஏற்பட்டது 'பணி, பணி' என்று அலைந்து, இறுதியில் 'வேலை, வேலை' என்று மூழ்கிவிடும் பல குருக்கள்/துறவிகள் வேலைக்கு அடிமைகளாகி விடுகிறார்கள். (workaholics), இதனால் பணிக்குரிய அன்பு, ஆதரவு, கருணை போன்ற உயர் பண்புகள் இயல்பாகவே குன்றிக் குறைந்து விடுகிறது?

நாளடைவில் தாம் செய்யும் பணிகளில் மட்டுமன்றி தங்கள் வாழ்க்கையிலேயே ஒரு விரக்தியும், வெறுப்பும் கொள்ளக்கூடும். இந்த நிலையை ஆங்கிலத்தில் ''burn out'' என்று குறிப்பிடுவார்கள். அதாவது, காலத்திற்கு முன்னரேயே வாழ்க்கையில் ஓர் எரிந்துவிட்ட தன்மையை அனுபவிப்பது குருத்துவ/துறவற உருவாக்கம் இரண்டாவது வத்திக்கான் சங்கத்தின் பின்னணியிலும், 60 களில் ஏற்பட்ட உளவளப் புரட்சியின் பின்னணியிலும் ஆய்வுக்குள்ளாகியது. இதன் விளைவாக ஓர் ஆரோக்கியமான ஒருங்கிணைந்த (Integrated) ஓர் உருவாக்கந்தான் 80 களுக்கும் 90 களுக்கும் தேவையென வலியுறுத்தப்பட்டு வருகிறது. அதாவது அறிவியல் ரீதியான வளர்ச்சி மட்டும் போதாது, அத்துடன் உணர்வியல் ரீதியான, ஆன்மீக ரீதியான வளர்ச்சியும் வேண்டும். இம் மூன்றும் மனிதனில் இயல்பாக உள்ளன. அவை ஒருங்கிணைந்த ரீதியில் வளரவேண்டும். அப்பொழுதுதான் நாம் முழுமனிதர்களாக வாழமுடியும்– வாழவேண்டும். இது, அனைத்து மக்களுக்கும் உள்ள ஓர் உள்ளார்ந்த அழைப்பு (an inner call) இது.

தொடர் உருவாக்கம்

இப்படிப்பட்ட ஓர் உருவாக்கம் (formation) குருத்துவக் கல்லூரியுடன் அன்றேல் நித்தியம் செய்தவுடன் முடிவடைவதில்லை. இது ஒரு தொடர் வளர்ச்சியாகையினால், அது வாழ்க்கை முழுமையாக நடைபெறுவது. இது இறுதிமட்டாக நாம் கேட்கும் (நிதானமாக நின்று கேட்பவர்களுக்கு) உள்ளார்ந்த அழைப்பு. ஆகவே எமது உருவாக்கந்தான் குருத்துவம் பெற்ற காரணத்தினால் அன்றேல் நித்தியம் செய்த காரணத்தினால் உருவாக்கப்பட்டுவிட்டோம் என்ற ஒரு நினைப்பு, என்று ஓர் எதிர்பார்ப்பு (பொதுமக்களின் எதிர்பார்ப்பு) தவறானது. மனிதர்களின் உள்ளார்ந்த தொடர்ச்சியான அழைப்பிற்கு முரணானது. இவற்றையிட்டு பின்னர் விரிவாக எழுதுவோம். 90 களுக்கு இப்படிப்பட்ட தொடர் உருவாக்கம் மிக அவசியமென இன்று திருச்சபையில் வலியுறுத்தப்பட்டு வருகிறது. தொடர் உருவாக்கம் (ongoing formation) தொடர்கல்வி (continued education) அல்ல என்பதுவும் ஈண்டு வலியுறுத்திக் கூறப்படவேண்டும்.

(வளரும்) கரவையூர்ச்செல்வம்

# திருவழிபாடும் திருஇசை....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளோடுஇசைந்திருக்கவேண்டும். சுரவரிசைகளின் சரியான ஏற்ற, இறக்கங்களைக் கவனித்து மனமொன்றித்துப் பாடும்போதே திருஇசை வழிபாட்டிற்குத் துணைநிற்கும். எனவே பாடகர்களும், இசை மீட்டுபவர்களும் கீழைத்தேச இசையிலும், மேலைத்தேச இசையிலும் போதிய பயிற்சி பெற்றவர்களாக இருக்கவேண்டும். ஏனெனில் எந்த இராகத்தில் ஒரு குறிப்பிட்ட பாடல் இசையமைக்கப் பட்டுள்ளதோ அதே இராகத்திற்கு ஏற்றவாறு பாடினால்தான் பயபக்தியாகச் செபிக்கமுடியும். எடுத்துக் காட்டாக சிவரஞ்சினி இராகத்தில் அமைந்துள்ள பாடல் ஒன்றை சீநாதவிநோதினியில் பாடினால் அது பிழையானதாகும். இரண்டும் ஒரே சுரவரிசைகளில் அமைந்திருந்தாலும் சுருதியும், சாயலும், சஞ்சாரமும் வேறுபடுவதனால், சில இடங்களில் சீநாத விநோதினியில் அமைந்துள்ள ‘என் ஆற்றலின் ஆண்டவரை’ என்ற பாடலுக்கு திடீரென பாடிக்கொண்டிருக்கும் போதே சிவரஞ்சினியின் இடையிசை அமைத்து இசைத்து விடுவார்கள். கேட்பவர்களுக்கு பக்தி குலைந்துவிடும். எனவேதான் எந்தப்பாடல்களுக்கும் இசைக் குறிப்பு அவசியம். இசை நாடாக்களை மட்டும் துணை கொண்டு பழகுவது மேற்கூறிய பிழைகள் வர ஏதுவாக இருக்கும்.

இசையறிவில் தேர்ச்சி பெறுவதிற்கு எமது யாழ். மறைவட்டத்தில் அருட்திரு. நீ. மரியசேவியர் அடிகளார் தலைமையில் இயங்கிவரும் கலை கலாச்சாரக் குழு பயிற்சியளித்து வருகிறது. எனவே மேற்கூறிய குறைகள் அனைத்தையும் நிறைவாக்கி சேவை மனப்பான்மையை வளர்க்கும் போது எப்போதும் பங்குகளில் தொல்லைதரும் திருஇசைக் குழாம் பிரச்சனைகளை ஓரளவாவது தீர்க்கமுடியும்.

**வழிபாட்டில் கர்நாடக இசையும் இசைக்கருவிகளும்**

கர்நாடக இசை மக்கள் எல்லோரும் சேர்ந்து பாடுவதற்கு ஏற்றதா என்று இன்று பலர் கேட்கின்றனர். கர்நாடக இசை கிரகோரியன் இசைக்கு ஒத்த பக்தியின் அடிப்படையில் எழுந்த சிறு பயிற்சியுடன் எல்லோரும் பாடக்கூடிய இசை. ஒவ்வொரு நாட்டின் மரபு இசைக்கும் நாம் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று 2 ஆம் வத்திக்கான் சங்க ஏட்டில் மரபு இசையைப் பற்றிய பகுதியில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. முற்காலத்தில் புரியாத இலத்தீன் மொழியில்கூட ‘‘கீரியோ’’ ‘‘குளோரியா’’, ‘‘தாந்தும் ஏர்கோ’’ போன்ற பாடல்களை மக்கள் எல்லோரும் பாடினார்கள் என்றால், இன்று அப்படிப்பட்ட பாடல்களை மக்கள் எல்லோரும் கர்நாடக இசையில் பாடமுடியும். கர்நாடக இசை பக்தியின் அடிப்படையில் தனிச்சுர இசையமைப்பில் எழுந்த உள்ளார்ந்த அமைதியைப் பிறப்பிக்கும் பண்பைக் கொண்ட இசை. மேலைத்தேச ஐரோப்பிய இசையானது இணைச் சுரங்களால் ஆன வெளியார்ந்த பரபரப்பையூட்டுகின்ற இசை.

இன்று எமது ஆலயங்களில் பாடப்படும் எண்ணிறந்தபாடல்களில் ஒரு சில மட்டுமே உண்மையாக உள்ளத்தைத் தொடுபவையாக அமைந்திருக்கின்றன. பல பாடல்கள்ஒருசில இராகசாயலைத்தழுவிய மெல்லிசையில் அமைவதனால் பக்திக்கு ஏற்றவையாக அமைவதில்லை, வழிபாட்டுப் பாடல்களைஎழுதி இசையமைக்க, விசேடகவி, இசைப் புலமை தேவை, மனிதநவரசங்களுக்குத் தகுந்தாற்போல் ஒவ்வொரு இராகமும் வெவ்வேறு உணர்வுகளை வெளிப்படுத்துவதால் இராகஉணர்வும் கவிதை உணர்வும் ஒன்று சேர்தல் அவசியம்,. மோகனத்தில் கெம்பீரமும், கம்சத்தொனியில் தொடக்கமும் வீரமும், இந்தோளத்தில் மகிழ்வும், மத்தியமாவதியில் முடிவும் சாந்தமும், சுத்தசாவேரியில் ஏக்கமும், உதயரவிச் சந்திரிக்காவில் அமைதியும், ஆனந்தபைரவியில் மனநிறைவும், சிந்துபைரவியில் சோகமும் புலப்படும். இதையறியாவிட்டால் சுருதி பேதத்தினால் மோகன இராகத்தில் பாடலுக்கு மெட்டு அமைந்திருக்க அது பாடப்படும் வேளையில், இந்தோளமாகவோ, சுத்தசாவேரியாகவோ அமையலாம். ஒரு சில சுரமாறுதலினால் அது மெல்லிசையாகவும் அமைந்து விடலாம். மேலும் கச்சேரி பாடும் முறையில் கர்நாடக இசைப்பாடல்களைப்பாடாமல் எளிமையாகவே பாடி இறை மக்கள் தியானம் செய்ய பாடகர்கள் உதவிசெய்ய முடியும்.

‘‘எல்லாம் தருகின்றேன்’’, ‘‘ஒருகோடிப்பாடல்கள்’’, ‘‘அன்பில் விளைந்த அமுதமே’’, ‘‘தமிழால் உன்புகழ் பாடி’’, ‘‘தலைவா உன் இதயத்தின்’’, ‘‘உன்திருயாழில்’’, ‘‘சுந்தர ஜோதி’’, ‘‘இறைவன் எனது மீட்பானார்’’ போன்ற பாடல்கள் முறையே மோகனம், சிவரஞ்சனி, பீம்பிளாஸ், கம்சத்தொனி, பாகேஸ்வரி, சிந்துபைரவி, ஆனந்தபைரவி, இந்தோளம் போன்ற இராகங்களில் சுத்தமாக அமைந்துள்ள கர்நாடக இசைப்பாடல்களாகும். இவை போன்ற கர்நாடக இசையில் அமைந்துள்ள அநேகமான பாடல்கள் எமது வழிபாடுகளில் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் தவறு என்னவென்றால் திரு இசைக்குழாம் அங்கத்தவர்கள் அதே அதே இராகசாயலை உணர்ந்து, அப்பாடல்களைப் பாடாமல் ஏனோதானோ என்று பாடுவதால் இறை மக்களின் பங்கு பற்றுதலுக்கு இடையூறாக அமைகின்றது.

(வளரும்)

# பழமொழி அகமும் முதுமொழியும்

வாசகர்களே!

கிறிஸ்தவர்கள் எல்லோரும் போதிப்பதை மட்டும் கேட்டு நின்று விடுகின்றார்கள். ஆனால்..? தாம் ஒரு ‘‘மறு கிறிஸ்து’’ என்பதை உணர மறுக்கிறார்களே!! அது ஏன்? எங்கேயும் எவரேனும் சொல்லும் வார்த்தைகளைத் தட்டிக் கேட்கத் துணிவில்லாதவர்களாய் இருப்பதனால்தான் எம்மிடையே கிறிஸ்துவின் பெயரைச் சொல்லி ஊடுருவல்கள் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன?

அரைகுறை விசுவாசத்தோடு வாழ்கின்ற எம்மவர்கள் ‘‘திருநூலை’’ நன்கு கற்றறியாமையால் விளைகின்ற துர்ப்பலம் இது!

பழமொழி ஆசிரியர் 20/23ல் ‘‘குறையும் எடை’’ ஆண்டவர்பால் வெறுப்புக்குள்ள தாம்! கள்ளத்தராசும் நல்லதல்ல’’ என்று கூறிநின்ற இறைவார்த்தைக்கு நம்முன்னோர் தரும் பதில் இது.

‘‘தட்டிக் கேட்க ஆளில்லா விட்டால்–தம்பி சண்டைப் பிரசண்டன்’’ என்றார்கள்.

உண்மைதானே. இன்று கிறிஸ்துவைப் பிரதிபலிக்க வேண்டியவர்கள் ‘‘சேனை... ஊழியம், கடமை’’ என்ற ஒரு குறுகிய வட்டத்துக்குள்ளே வாழ்ந்து கொண்டு ‘‘தம் கடமை முடிந்து விட்டது’’ என்று ஒரு வித நிறைவுகொள்கிறார்கள். கிறிஸ்தவ இயக்கங்களை–சீண்டவில்லை–தூண்டுகிறேன்!

இன்னொன்றையும் உங்கள் சிந்தனைக்குத் தருகிறேன். இன்று எம்மவரின் வாழ்வு அரசியலை–ஏமாற்றுப் பேர்வழிகளை–நல்மனம் படைத்த இயக்கங்களை நம்புகின்றோம்! ஏற்கின்றோம்!! எதிர்பார்க்கின்றோம்!!! ஆனால்? அனைவரையும் மீட்கவல்லவர் இறைவன் ஒருவரே. அவர் மண்ணிற்கும் விண்ணிற்கும்’’ ஆண்டவர்’’ என்ற உண்மையை மறந்து வாழ்ந்தோமே!

ஒவ்வொரு மனிதரின் அடிச்சுவடுகளை அரசியலாளர் அல்ல, ஆண்டவனே அளந்து தீர்ப்பிடுகின்றவர் என்று கூறும் திருநூல் தத்துவம் இது!

‘‘மனிதனுடைய அடிச்சுவடுகள் ஆண்டவரால் நடத்தப்படுகின்றன! ஆனால், மனிதரில் எவன் தன் கதியைக் கண்டு பிடிக்கக் கூடியவன்’’! என்று 20/27ல் சிந்திக்கத் தூண்டுகிறார்.

நமது கவிஞனும்–
‘‘ஏமாறாதே–ஏமாறாதே !
ஏமாற்றாதே – ஏமாற்றாதே’’
என்று எல்லோரையும் சிந்திக்க அழைக்கிறார்.

**வாரம் ஒரு சிந்தனை:**

நம்ப நட–ஆனால்?
நம்பி நடக்காதே!

அன்புடன், எஸ். ஏ. நாதர்.




| | |
|---|---|
| ஒளி: 4<br>சுடர்: 19 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |

**விழி வழி:**

## புரிந்துணர்வு

புரிந்துணர்வு என்பது சிறு வயதிலே வித்திடப்பட வேண்டிய அரும் பெரும் குணமாகும். இன்று வீட்டுக்கு வீடு புரிந்துணர்வு அற்ற தன்மையால் எத்தனையோ பிரச்சினைகள் உருவாகின்றன. எதற்கும் அடி தடி தான் பரிகாரம், பயன் அளிக்கும் என்று நினைத்து ஒவ்வொரு சிறுசும் நான் முந்தி, நீ முந்தியென சண்டை பிடிக்கின்றனர்.

விட்டுக் கொடுக்கும் குணம் உயர்ந்த குணம் என்பதைப் புரியவைப்பதில் பெரியவர்கள் தவறிவிட்டனரோ என எண்ணத் தோன்றுகிறது. மற்றவரின் துன்ப துயரங்களைப் புரிந்து கொள்ளும் தன்மை எமக்குள் உருவானால் நாம் நமக்குள் ஏற்படும் பிரச்சினைகளை, இழப்புகள் இன்றி இலகுவில் தீர்த்துக் கொள்ளலாம்.

அன்புக் கண்மணிகாள் !

புரிந்துணர்வு என்னும் புனித குணத்தால் தியாகம் என்ற அற்புத சக்தி உன்னுள் உதிக்கும், இதனால் மூத்தவர்களை மதிக்கவும், ஆசானுக்கு ஏற்ற மாணவனாக வாழவும், பெற்றோரின் அரும் பெரும் செல்வமாகவும் நீ ஆகமுடியும். உன்னால் உன் வீடு, கல்விக்கூடம், பெருமை பெறும் எனக்கூறும்·

அன்பின்
அன்பு விழி

## வாருங்கள் மக்களே !

அன்பெனும் வீணையின் நரம்புகளால்
அனைவரையும் ஒன்று சேர்ப்போம்.
அதில் எழும் நாதங்களால்
அனைவரையும் வாழ வைப்போம்.

அயலவரின் துன்பம் எனும் பாலைவனத்தில்
ஆறுதல் எனும் மழையாவோம்
காலத்தின் கோலத்தினால் கஷ்டப்படுபவர்களை
கடமை எனும் உணர்வில் கரைசேர்ப்போம்.

எது வந்த போதும்—எம்மில்
தன்னுணர்வை ஏற்றுவோம்,
எம் இடர்களால் பலர் படும் வேதனையைக்கண்டு—எம்
குறைகளை ஒழிப்போம்.

சவக்குழியின் சடலங்களாக
சமாதானம் போகாமல்—எம்,
சகோதரனை உளமாற்றும்
சக்தியாக அதனை ஆக்குவோம்.

எங்கும் இவ்வேளையில்
தொடரும் துன்ப சோகங்களில்,
அங்கும் அன்பெனும் பண்பை
அறிவிப்பது எம் கடனென்போம்.

வாருங்கள் மக்களே !
உளமாற்றம் பெறுவோம்.
விரக்தியின் விளிம்பிற்கு வந்தவர்களுக்கு
வாழ்வுண்டு என வழிசெய்வோம்.

வெ. யூஜின்
A/10.

ஆக்கம் 1

## அன்பின் பொன்மொழிகள்

★ உண்மையினாலும், அன்பினாலும் நாம் உலகத்தையே வெற்றிகொள்ள முடியும் என்பது என் உறுதியான நம்பிக்கை; கடவுள் உண்மை அன்பு மயம்; இதை என் வாழ்க்கையில் காட்டுவதைத் தவிர உயிர் வாழ்வதில் வேறு பற்றுதல் எனக்குக் கிடையாது. —காந்தி.

★ பகைவனின் மாய அன்பைவிட நண்பனின் கடுஞ்சினம் மேலானது. —இங்கிலாந்து.

ஜெனிவி தனபாலன் பெர்னாண்டோ
அங். எண். B 137.

## உங்களுக்குத் தெரியுமா போட்டி—34

பாதுகாவலன் பத்திரிகையில் இதழ் 15—20 வரை வினாவுக்குரிய சரியானவிடையைக் கண்டு பிடித்து வினா இலக்கத்தையும், சரியான விடையையும் தெளிவாக எழுதி 10–07–90ற்கு முன் 'பாதுகாவலன்' அ. பெ. இல. 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

பரிசு ரூபா 25/–

**வினாக்கள்:**

1) வெளித்தோற்றத்திற்கு யூத சமயத்தைப் பின்பற்றிய மன்னன் யார் ?

2) 'செபமாலைப் பேரணி' ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் யாது ?

3) ஆசிரியர், முதியோர், ஆன்மீக வழிகாட்டிகள்—எதற்கு அழைக்கப்படுகின்றனர் ?

4) இன்றைய காலகட்டத்தில் கத்தோலிக்க இளைஞர் வழி தவறிச் செல்லுவதற்கு மூலகாரணம் யாது ?

5) நீண்ட காலமாக இலங்கை இராணுவத்தின் கடமைகளுக்கு சிரேஷ்ட பொறுப்பாளராகப் பணியாற்றியவர் யார் ?

6) சீடர்கள் 'எம்மாவுஸ்' செல்லும் வழியில் ஆண்டவரைச் சந்திக்கத் துணை நின்ற மூன்று நிலைகள் எவை ?

### போட்டி 33 இன் சரியான விடைகள்

1) கிறிஸ்தவ வாழ்வின் முன் கதவு ஞானஸ்நானத்தினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

2) முதல் யுத்தம் 1914—1918.

3) தன்னலமற்று எதுவித பயனும் கருதாமல் தியாகவாழ்க்கை வாழ்ந்து நாட்டிற்கும், பிறருக்கும் நன்மை செய்து அஞ்சா நெஞ்சமும், கஷ்டங்களை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவமும் எதையும் இலட்சியத்திற்காக தியாகம் செய்யும் உள்ளமும் கொண்டு, பிறருக்காக சமுதாயத் தேவைகளுக்காக முன்னின்று உழைக்கும் போதுதான் நாம் பிறந்ததன் நோக்கம் நிறைவேறுகிறது.

4) வாழ்வின் இரு முக்கிய நியதிகள் இறப்பதும், உயிர்ப்பதும் ஆகும்.

5) கிறிஸ்துவுக்கும், திருச்சபைக்கும் இடையிலுள்ள புலன்களுக்கும் கெட்டாத ஞான உறவைத் தம்பதிகள் கண்டு பாவித்து அந்நியோன்னியமாக ஒருவரை ஒருவர் அன்பு செய்து வாழமுடியும்.

6) பொதுசன நூலகத்தில் இன்னும் அசையாது நிற்கும் மாமனிதர் வண. பிதா திமோத்தி லோங் அடிகளார்.

பரிசு பெறும் நற்பேறாளர்
**செல்வி. A. மேரி அன்னா**
சென் ஜேம்ஸ் வீதி,
விடத்தல்தீவு.

## எழுதிச்செபியுங்கள் போட்டி—34

சென்ற இதழில் போட்டி 34க்கான செபத்தின் கருப்பொருள் தவறுதலாக வெளியிடப்படவில்லை. தவறுக்காக வருந்துகிறோம்.

''திரு இருதயப் பக்தி வளர' என்ற தலைப்பில் ஒரு செபம் எழுதி அனுப்புங்கள். இறுதி நாள் 8–7–90 என மாற்றப்பட்டுள்ளது என்பதையும் அறியத்தருகின்றோம்.

## ஊக்குவிப்புத்தேவை

மற்றைய புதினப் பத்திரிகைகளைத் தேடி வாசிப்பதைப் போல பாதுகாவலன் பத்திரிகையை மக்கள் தேடிப்பெற்று வாசிக்க மாட்டார்கள். அப்படித் தேடி வாசிப்போர் இல்லாமலில்லை. ஆனால் பெரும்பாலானவர்கள் சலிப்படைந்து போகின்றார்கள். ஏனெனில் திருச்சபையின் படிப்பினைகளும், போதனைகளும் கசப்பானவை. நாம் முயன்று சுவையூட்டிக் கொடுத்தாலும் இனிப்பூட்டப்பட்ட மாத்திரைகள் புறக்கணிக்கப்படுவதுபோல கைவிடப்படுகின்றன.

எனவே, அவற்றை வாசல்படி வரை கொண்டு சென்று வாசிக்கத் தூண்டும்படி அனைத்து மறை ஆர்வலர்களையும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம். ஊக்குவித்து பணிபுரியும் அனைவருக்கும் எமது நன்றிகளும், பாராட்டுக்களும்.

ஆ—ர்.

### 1ஆம் ஆண்டு நினைவாஞ்சலி



**செல்வன் நவரெட்ணராசா அன்ரன் பிரிதிவிராயன் (பியூட்டி)**

அன்னை மடியில்
**23-03-1976**
ஆண்டவனடியில்
**16–06–1989**

சர்வதயாபர யேசுவே !

சிறுவர்களை என்னிடத்தில் வரவிடுங்கள் என்று உமது சீடர்களுக்குத் திருவாய் மலர்ந்தருளினீரே, எங்கள் செல்லப் பியூட்டி உம்முடைய சம்மனசுகளுடன் உமது திருப்பாதங்களிலே பூசை செய்து பேரின்ப வாழ்வில் என்றென்றும் அக்களிக்கச் செய்தருளும்.

ஆண்டவரே ! எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இவரது பிரிவால் துயருறும்,
**அப்பா, அம்மா, தம்பி, உற்றார், நண்பர்கள்.**

A/132

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி. ஆரோக்கியம் தேவசகாயம்**
விண்ணில் 20–6–1989

''சிவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள். இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 20–6–90 புதன் கிழமை, தெல்லிப்பளை புனித இராயப்பர் சின்னப்பர் ஆலயத்தில் மாலை 4 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இத்திருப்பலியில் பங்குபற்றி இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்,
**கணவன், பிள்ளைகள், மருமக்கள். பேரப்பிள்ளைகள்.**

தெல்லிப்பளை கிழக்கு,
தெல்லிப்பளை. A/134

## கனி கொடுக்கும் கிளை....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாளாந்த வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களை பொறுமையோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். நாளாந்தம் ஏற்படும் துன்பங்களை நாம் ஏற்றுக் கொண்டால்தான் நாம் கிறிஸ்துவைப் பின்பற்ற முடியும். அவர் வழியாய் அன்றி நாம் வீடுபேற்றை அடைய முடியாது. கிறிஸ்துதான் வீடுபேற்றை அடைவதற்கான ஒரேவழி. நாம் அந்த கிறிஸ்துவாகிய வழியினுடாகத்தான் செல்லவேண்டும். எனவே நாம் எமது துன்பங்களை பொறுமையோடு தாங்கிக்கொண்டு அவரது போதனையின்படி வாழவேண்டும். எம் துன்பங்கள் வழியாக நாம் மீட்புப்பணியில் பங்குகொள்கிறோம். ''கிறிஸ்துவின் பாடுகளில் உள்ள குறையை என்பாடுகளால் நிறைவு செய்கிறேன்.'' என்று சின்னப்பர் கூறியுள்ளார். இயேசு மரணமட்டும் தந்தைக்கு கீழ்ப்படிந்தது மகன் தந்தை மீதுள்ள அன்பைக் காட்டிற்று. அதே போல நாமும் எமது வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களை ஏற்கும் போது இறைவன் மீது நமக்குள்ள அன்பை வெளிக்காட்டுகிறோம்.

கிறிஸ்துவையே ஆதாயமாக்கிக் கொண்டு வாழுகின்ற கிறிஸ்தவர்களாகிய நாங்கள் துன்பங்களைக் கண்டு துவண்டுவிடாது, அதை துரத்திவிட வேண்டும். துன்பங்கள் எம்மை வருத்தும்போது இறைவனிடம் செபிக்கவேண்டும். பிறர் துன்பப்படும்போது அது எமக்கேற்பட்ட துன்பங்கள் என நினைந்து அவர்களது துன்பங்களில் பங்கு கொள்ள முயற்சி செய்யவேண்டும். கிறிஸ்து எமக்காக எத்தனையோ துன்பங்களைத் தாங்கினார். அதேபோல் நாமும் எமது அயலவரின் துன்பத்தில் பங்குகொண்டு அதில் கிறிஸ்துவைக் காணவேண்டும்.

இறுதியாக எமது வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களால் எமது விசுவாசம் உறுதிப்படுத்தப்படுகின்றது. எமது தியாக வாழ்வு மேலும் வலுவடைகின்றது. லௌகீக பற்றுதல்களில் இருந்து விடுபட்டு இறைவன் மேல் விசுவாசம் வளர்ந்து அவரோடு நெருங்கிய முறையில் இணைக்கப்படுகின்றோம். எமது பொறுமையும், விசுவாசமும் மற்றவர்களை சிந்திக்கச் செய்து அவர்களையும் விசுவாசத்திற்கு இட்டுச்செல்கிறது. நாங்கள் இன்னும் நல்லவர்களாக வாழ நற்செயல்களைச் செய்ய மேலும் உதவுகிறது. ''கனி கொடுக்கும் கிளைகளை மேலும் கனிகொடுக்கும்படியாகத் தறிப்பார்.''

**S. செல்வக்குரு**
தாழையடி.

திருவழிபாட்டு நிலையம்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

## திருவழிபாட்டு தலைமைத்துவப் பயிற்சி

இடம்: தியான இல்லம் பண்டத்தரிப்பு.
காலம்: 27 ஆவணி—2 புரட்டாசி அல்லது 17–23 புரட்டாசி.

யாழ் மறைவட்ட பொதுநிலையினருக்கான திருவழிபாட்டு தலைமைத்துவப் பயிற்சி மேல் குறிப்பிட்ட காலங்களில் நடைபெற உள்ளது. இதில் பங்கு பெற விரும்புவோர் பங்குத் தந்தையரின் அனுமதியுடன் விண்ணப்பிக்கவும். விண்ணப்ப முடிவு திகதி 31–07–90.

இயக்குனர் **அருட்திரு. J. நீக்கிலஸ்**
திருவழிபாட்டு நிலையம்,
ஆயர் இல்லம்,, யாழ்ப்பாணம்.

A/133

### 31ஆம் நாள் நினைவு



**பஸ்ரியாம்பிள்ளை நீக்கலஸ்**
(இளைப்பாறிய தலைமை ஆசிரியர்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| **28-8-1908** | **19–5–1990** |

''என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் உயிர் வாழ்வான்''

இறைவா! உமது அன்பினிலே எம்மை வளர்த்து, வாழ வழி வகுத்து எங்கள் மனங்களிலே என்றும் நிலைத்திருக்கும் எங்கள் அருமைப்பப்பாவை முடிவில்லா பேரின்ப வான் வீட்டில் சேர்த்தருளும்.

இவரது ஆன்ம சாந்திக்காக 19–06–90 செவ்வாய், காலை ஏழு மணிக்கு மிருசுவில் புனித நீக்கிலஸ் ஆலயத்தில் இரங்கற் பலி ஒப்புக்கொடுக்கப்படும். உறவினர், அன்பர்கள் அனைவரும் இப்பலியில் பங்குபற்றி, இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்குமாறு கனிவுடன் வேண்டுகிறோம். நன்றி.

பிரிவினால் துயருறும்
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மைத்துனி. மைத்துனன்.**

A/137

பாதுகாவலன்
PATHUKAVALAN

## அணுக்குண்டிலும்வலிமைவாய்ந்தது இளைஞர்களிடமுள்ள சக்தி

ஆந்திராவில், நல்குண்டா வில் நடந்த ஆந்திரக் கத்தோலிக்க இளைஞர்களின் 2ஆவது மாநாட்டில் நல்குண்டா ஆயர் தொடக்க வழிபாடு நடத்தினார். இம்மாநாட்டில் ஆந்திரக் கத்தோலிக்க ஆயர் பேரவையின், இளைஞர் கழகத்தின் தலைவருமான ஆயர் தொம்மா கலந்து கொண்டார். மாநாட்டைத் தொடக்கி வைத்துப் பேசிய நல்குண்டாக் காவல்துறை உயர் அதிகாரி, இளைஞர்கள் கட்டுப்பாடு இலட்சியம், கடின உழைப்பு ஆகியவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் இளைஞர்களைக் கேட்டுக் கொண்டார். ஆயர் தொம்மா, இளைஞர்களிடமுள்ள சக்தி அணுக்குண்டின் சக்தியை விட வலிமை வாய்ந்தது. எனவே இச்சக்தியை இளைஞர்கள் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்த வேண்டுமெனத் தனது உரையில் குறிப்பிட்டார்.

## வடகிழக்கு இந்தியாவில் திருச்சபை

கிறிஸ்துவின் நற்செய்தி கிடைத்த நூறாண்டு நிறைவு வடகிழக்கு இந்தியாவில் நவம்பர் மாதம் கொண்டாடப்படும். இதற்கு ஆயத்தமாக பல கருத்தரங்குகளும், ஆய் வரங்குகளும் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளன. வடகிழக்கு இந்தியாவில் திருச்சபை கல்வி, சுகாதாரம், சமூக பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றில் ஆற்றியுள்ள பணிகள் பற்றியும் வருங்காலத்தில் நற்செய்திப் பணியில் பொதுநிலையினர் பங்கு பண்பாட்டு மயமாக்குதல், இறைவார்த்தையை ஆழமாகக் கற்றல் ஆகியவைபற்றியும் ஆராயப்படும்.

### ஆயர் பேரவை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி(

அகஸ்திேனோ கசரோலியின் தலைமையில் பல நாடுகளிலிருந்தும் 19 பேராயர்களும், ஆயர்களும் மற்றும் யேசுசபை, ஆசீர்வாதப்பர் சபை, புனித செலஸ்டீன் சபைத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

## 47 புதிய குருக்கள்

வெரித்தாஸ், ஜுன்10. வத்திகானில் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் தூய திருத்துவத் திருவிழாவன்று 47 புதிய குருக்களைத் திருநிலைப்படுத்தினார், இவர்களில் நான்கு இந்தியரும் ஒரு கொரிய நாட்டைச் சேர்ந்தவரும் அடங்குவர்.

## பாதுகாவலன் வளர நிதி

| | | |
|---|---|---|
| 208. | A. கலிஸ்ரா, சென். யேம்ஸ், இளவாலை. | 20—00 |
| 209. | ஓர் அன்பர், திருகோணமலை. | 20—00 |
| 210. | காவலன் அபிமானி, திருகோணமலை. | 20—00 |
| 211. | லூசியா சூசைப்பிள்ளை. | 25—00 |
| 212. | காவலன் அபிமானி, யாழ்ப்பாணம். | 15—00 |

இலங்கை மக்களின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க செய்திப் பத்திரிகையான பாதுகாவலன் வளரத் துணைபுரியும் உங்களுக்கு எமது மனமார்ந்த நன்றி

(ஆ-ர்)

## மரணஞாபக அறிவித்தல்கள்

யூன் 19.

திருமதி. அந்தோனிப்பிள்ளை

4ஆம் ஆண்டு நினைவுத் திருப்பலி.

சில்லாலை ஆரோக்கிய மாதா ஆலயம், காலை 6 மணிக்கு.

பற்றிமாவாசா, சில்லாலை, நாகசெட்டிகமம், நானாட்டான்.

யூன் 19.

திரு. அந்தோனிப்பிள்ளை

7ஆம் வருட நினைவுத் திருப்பலி

சில்லாலை ஆரோக்கியமாதா ஆலயம், காலை 6மணிக்கு.

பற்றிமாவாசா, சில்லாலை, நாகசெட்டிகமம், நானாட்டான்,

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
த.ல. QB/1001/58/81

# கலை கடவுளின் கொடை

'கலைச்சேவை,கடவுள் சேவை, — கடவுள் தந்த கொடைகளை அவருக்கே நாம் அர்ப்பணிக்க வேண்டும்'' என்று இயக்குனர் பேராசிரியர் நீ. மரியசேவியர் அவர்கள் தமது சிறப்புரையில் குறிப்பிட்டார்.

திருமறைக் கலாமன்றத்தின் மாதாந்தக் கலைஞர் ஒன்றியமும், கலை, கலாச்சாரக் குழுக்கள் தேர்வும் ஆனித்திங்கள் 7 ஆம் நாள் பௌர்ணமி தினத்தன்று புனிதர் சாள்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு நெடுந் தொலைவுகளிலுள்ள பங்குகளான நெடுந்தீவு, வலைப்பாடு, எழுவைதீவு, உருத்திரபுரம் உட்பட பல பங்குகளிலிருந்து அவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது தவிர மன்றத்தின் பன்முகப்படுத்தப்பட்ட வேலைத் திட்டங்களுக்குத் தமது சேவையை அர்ப்பணிக்க அவர்கள் தாமாகவே முன்வந்தனர்.

பல பங்குகளிலுமிருந்தும் வந்திருந்த பிரதிநிதிகள் மன்றத்தின் கலை, கலாசார நடவடிக்கைகளில் இணைந்து பணி செய்ய முன்வந்தமை ஓர் சிறந்த எடுத்துக்காட்டு.

# ஆன்மீகத்தைக் கட்டிஎழுப்புங்கள்

வெரித்தாஸ் ஜுன் 3. ஜேர்மனியின் பேர்லின் நகரில் நடைபெற்ற கத்தோலிக்க நிறுவனங்களின் ஆண்டுக் கூட்டத்திற்குத் திருத்தந்தை வாழ்த்துச் செய்தி அனுப்பினார். பேர்லின் சுவர் தகர்க்கப் பட்ட இவ்வேளையில் ஐரோப்பாவின் ஆன்மீகம் கட்டி எழுப்பப்பட வேண்டுமெனத் திருத்தந்தை அந்தச் செய்தியில் குறிப்பிட்டிருந்தார். மேலும், பேர்லின் சுவரின் தகர்ப்பு மீண்டும் பேர்லினை ஒரு நம்பிக்கை நகரமாக உலகிற்கு காட்டுகிறதுஎன்றும், தனது ஆன்மீக ஆழத்தை ஐரோப்பா உணருகின்ற போது தான் 3 வது மற்றும் 4 வது நாடுகளின் பிரச்சனைகளை ஐரோப்பாவால் புரிந்து கொள்ள இயலும் என்றும் திருத்தந்தை கூறியுள்ளார். இக்கூட்டத்தில் 1 இலட்சத்து 26 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.

பேர்லினில் நடைபெற்ற 90 ஆவது ஜேர்மன் கத்தோலிக்க மாநாட்டில் அருட்திரு கார்லஸ்மன் கலந்துகொண்டு பேசுகையில் கிழக்கு மற்றும் மேற்கு ஜேர்மனி மக்கள் நீதி, அமைதி, மற்றும் சுதந்திரம் போன்ற மதிப்பீடுகளுக்குத் தங்களையே கையளிக்க முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். மேலும் உலக வரலாற்று மேடையில் கடவுள் வெறும் பொம்மைகளை விரும்பவில்லை. தங்களது எதிர் காலத்தை தாங்களே நிர்ணயித்துக்கொள்கிற துடிப்புள்ள மனிதர்களை விரும்புகிறார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## கிறிஸ்தவ ஆளுநர்

கிறிஸ்தவ பொதுநிலை இறையியலாளரும், மார் தோமா சிரிய திருச்சபையைச் சேர்ந்தவருமான டாக்டர் எம். எம். தோமஸ் நாகாலாந்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இறையியல் துறையில் பல பல்கலைக் கழகங்களில் கலாநிதி பட்டம் பெற்றவர். தற்போது கேரள பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ கல்வி நிறுவனத்தின் இயக்குநர் ஆவார்.

நாகாலாந்து கிறிஸ்தவர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசம் என்பது குறிப்பிடத் தக்கது.

## உள்ளூர் உதவியில் புலமைப்பரிசு

யூக்கன் ஏப். 15 இந்தோனேசிய ஆயர் பேரவை தான் இதுவரை அளித்து வந்துள்ள புலமைப் பரிசில் திட்டத்தை மீளாய்வு செய்ய எண்ணியுள்ளது. முன்பு மேற்கு ஜேர்மனியின் நிதியுதவியுடன் பிதா பீற்றர் ஜெம்மாவினால் ஆரம்பிக்கப்பட இப் புலமைப் பரிசிலை உள்ளூர் உதவியைக் கொண்டே நடத்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## துறவிகள் உண்ணாவிரதம்

யூக்கன் ஜுன் 7 பங்களாதேஷ் துறவியர் பேரவையின் நீதிக்கும் சமாதானத்துக்குமான மன்றம், அணு ஆயுத பரிசோதனைகளை நிறுத்தும்படி கோரி ஓர் சர்வதேச உண்ணாவிரத இறுதியில் இடம்பெற்ற செப தியான நிகழ்ச்சியில் திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

## அரசு மன்னிப்புக்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே இச்செயலுக்கு அரசு அதிகாரிகள் பொதுமக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டுமென்று கருதினால் ஸ்டீபன் கிம் அழைப்பு விடுத்தார். கொரியத் திருச்சபையில் நடந்த இவ் அடக்குமுறை நடவடிக்கையின் 10 ஆண்டு நிறைவை முன்னிட்டு கொரியக் கத்தோலிக்க மாநிலத்தில் கருதினால் ஹிபோஷன் துன்புற்ற மக்கள் தங்களைத் துன்புறுத்தியோரை மன்னிக்கும் போது தான் இக்காயங்கள் ஆறும் எனக் குறிப்பிட்டார். நேரடியாகவோ, மறைமுகமாகவோ இதற்குப் பொறுப்பான வர்கள் நாட்டு மக்களிடம் தாங்கள் செய்த குற்றத்தை ஏற்று அதற்கு வருத்தம் தெரிவிக்க வேண்டுமென கருதினால் கிம் கூறினார்.

## கறுப்பின சமயங்களுக்கு பாராட்டு

வெரித்தாஸ், ஜுன் 10 திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பரைச் சந்திப்பதற்காக வந்திருந்த பிரேசில் ஆயர்களிடம் பிரேசிலில் நிலவும்ஆபிரிக்க, பிரேசில் கறுப்புஇனச் சமயங்களின்முறையானபாரம் பரியங்களைத் திருத்தந்தை பாராட்டிப் பேசினார். ஆனால் மூட நம்பிக்கைகள் மிகுந்துள்ள இப்பாரம்பரியங்கள் கிறிஸ்தவ சமயத்துடன் கலந்துவிடாதிருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டுமெனப் பிரேசில் ஆயர்களைத் திருத்தந்தை எச்சரித்தார். பிரேசிலின் ஜனத்தொகையான 141 மில்லியன் மக்களில் 88% கத்தோலிக்கர் என்பது குறிப்பிடத் தக்கது.

## 45 ஆண்டுகளின் பின் ரஷ்ய ஆயர்களின் முதற் சந்திப்பு

வெரித்தாஸ்,ஜுன் 10 எழுபத்தாழ 45 ஆண்டுகளுக்குப் பின்பு முதல் முறையாக மேற்கத்தைய நாடுகளிலுள்ள யுக்கிரேன் திருச்சபையைச் சார்ந்த 19 கத்தோலிக்க ஆயர்களும் ரஷ்யாவின் யுக்கிரேன் பிராந்தியத்தின் 3 மறை மாநில ஆயர்களும், யூன் 25, 26 ஆம் திகதிகளில் வத்திக்கானில் சந்தித்து பேசுவர் என யுக்கிரேன் கருதினாலின் செய்தியாளர் சோனியா அறிவித்தார்.

**உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிக்கிறோம் என்கிறார் ஆண்டவர்**